Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 12 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷஃபான் 22 (29.10.2002) செவ்வாய்க்கிழமை இதழ் : 29

SERVO
World - Class Engine Oils
சேர்வோ
உலகின் அதிசிறந்த இயந்திர எண்ணெய்
வடமாகாண விற்பனை விநியோகஸ்தர்
THAMPI HOLDINGS (PTE) LTD.
HOTLINE:0775-382343, 072-401423, 01-343125
(சி-052)



# புலிகளிடம் சரணடைந்த இளம் சிப்பாய் மனித உரிமைக்குழுவிடம் ஒப்படைப்பு!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.அரசியற்துறைப் பணிமனையில் நேற்றுக்காலை 11 மணியளவில் இளம் இராணுவச் சிப்பாய் ஒருவர் சரணடைந்தார். நேற்று மாலை 4.30 மணிக்கு அவர் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கம்பஹா மாவட்டத்தின் களனியா என்ற இடத்தைச் சேர்ந்த இராங்க றொசான் ஜெயவர்தனா என்ற 17 வயது இராணுவச் சிப்பாயே நேற்றுக் காலை விடுதலைப் புலிகளின் யாழ். அரசியல் பணிமனையில் சரணடைந்தவராவார். 513ஆவது பிரிகேட்டைச் சேர்ந்த இச்சிப்பாய் மானிப்பாயிலுள்ள முகாமில் புலனாய்வுத்துறை உறுப்பினராக கடமை புரிந்திருக்கின்றார்.



விடுவிக்கப்பட்ட சிப்பாயுடன் மனித உரிமை ஆணைக்குழுப் பிரதிநிதியும் புலிகளின் பிரதிநிதியும்.

நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் இவர் கடமை புரியும் இராணுவ முகாமிலிருநது தப்பி வந்து யாழ்.நகர் விடுதி ஒன்றில் தங்கியிருந்தார்.

பின் நேற்றுக்காலை 11 மணியளவில் பொற்பதி வீதியிலுள்ள விடுதலைப்புலிகளின் யாழ். அரசியல் பணிமனையில் வந்து சரணடைந்தார்.

இவரை நேற்று மாலை 4.30

(10ஆம் பக்கம் பார்க்க)



வீடு திரும்பும் சிப்பாய்.

தாய்லாந்துப் பேச்சு | செயலணிக் குழு | ராணுவக் கட்டமைப்பு

# இறுதி முடிவுகளை எடுப்பது யார்?

# சந்திரிகா - ரணில் காரசார விவாதம்!

## தனது நிலைப்பாட்டில் ஜனாதிபதி கடுமை



(கொழும்பு நிருபர்)

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரசிங்கவுக்கும் இடையே நேற்றுக் காரசாரமான சந்திப்பொன்று நடைபெற்றது. சமாதான முயற்சிகளோ, பாதுகாப்பு சம்பந்தமான மாற்றங்களோ தனக்கு உடனடியாக அறிவிக்கப்பட வேண்டுமென்றும், எந்த இறுதி முடிவும் தன்னாலேயே மேற்கொள்ளப்படும் என்றும் இச்சந்திப்பில் ஜனாதிபதி சந்திரிகா தனது நிலைப்பாட்டினை கடுமையான தொனியில் வலியுறுத்தினார்.**

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே நேற்றுப் பகல் 12.30 மணிக்கு சந்திப்பொன்று நடைபெற்றது.

ஜனாதிபதி மாளிகையில் நடந்த இச்சந்திப்பு - பிற்பகல் 2 மணிவரை நீடித்தது.

காரசாரமான வாக்குவாதங்களுடன் நடந்த இச்சந்திப்பில் - பிரதமர் ரணிலுடன், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும் - ஜனாதிபதி சந்திரிகாவுடன், முன்னாள் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பில் பல விடயங்கள் பற்றிப் பேசப்பட்டதாயினும் - அனைத்து விடயங்களிலும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது நிலைப்பாட்டினை கடுமையான முறையில் வலியுறுத்திப் (10ஆம் பக்கம் பார்க்க)

## நாளை கொழும்பு செல்லும் புலிகள் குழு உடனடியாக தாய்லாந்து பயணம்

(கொழும்பு)

தாய்லாந்தில் நடைபெறவுள்ள 2ஆம் கட்டப் பேச்சுவார்த்தையில் பங்குபற்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளான கலாநிதி அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தளபதி கேணல் கருணா ஆகியோர் நாளை கிளிநொச்சியிலிருந்து ஹெலிமூலம் கட்டுநாயக்க விமான நிலையம் சென்று, உடனடியாகவே தாய்லாந்து பயணம் மேற்கொள்வார்கள் என்று தெரிய வருகின்றது.

இவர்களுடைய பயணத்துக்கான ஆயத்தங்களை நோர்வேத் தூதரகம் மேற்கொண்டு வருகிறது. நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்போர்க் இவர்களுடன் தாய்லாந்துக்குப் பயணமாவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### அரச குழு ரணிலுடன் பேச்சு

தாய்லாந்து செல்லவுள்ள அரசாங்கப் பிரதிநிதிகள் நேற்று பிற்பகல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தனர். நாளைமறுதினம் ஆரம்பமாகவுள்ள 2ஆம் கட்டப் பேச்சுவார்த்தைகளுக்காக 12 பேர் கொண்ட அரசாங்கப் பிரதிநிதிகள் குழு இன்று தாய்லாந்து புறப்படுகிறது.

விண்ணாணம் விநாசியர்



சமாதான காலத்திலயும் தலைதெறிக்க யுத்தவேகம் என்னத்துக்கு....?

## இராணுவ ட்ரக் மோதி ஓட்டோ பலத்த சேதம்

### பூநாறி மரத்தடியில் இருவர் காயம்

நேற்றுக்காலை பூநாறி மரத்தடிச்சந்தியில் நடைபெற்ற ட்ரக் - மினிபஸ்- ஓட்டோ - மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்தனர்.

காலை 10 மணியளவில் இப்பகுதியில் இராணுவ ட்ரக், பயணிகள் பஸ் வண்டி, ஓட்டோ, மோட்டர் சைக்கிள் என்பன ஒன்றன்பின் ஒன்றாக



மோதப்பட்ட ஓட்டோவும் மோதிய இராணுவ ட்ரக்கும்.

மோதியதில் ஓட்டோ பலத்த சேதத்திற்குள்ளானது. மினி பஸ்ஸின் பின்புறமும் சேதமுற்றது.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்களான மகாஜனாக் கல்லூரி ஆசிரியர்களான எட்வேர்ட் கீதா பொன்கலம் வேதநாயகம் ஜோன்சன், மங்களம் மணிசேகரன் ஆகியோர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## என்னைப் போல் வயது குறைந்தோர் இன்னமும் படையில் உள்ளனர்!

### சரணடைந்த இளம் சிப்பாய் தெரிவிப்பு

நேற்று விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த இளம் இராணுவச் சிப்பாய் தம்மைப்போல் பலர் வயதில் குறைந்தவர்களாக இராணுவத்தில் இருப்பதாக தெரிவித்தார். இச்சிப்பாய் தான் 1985 ஆண்டு தைமாதம் பிறந்ததாக குறிப்பிட்டர்.

தாம் இராணுவத்தில் 2000ஆம் ஆண்டு இணையும்போது 15 வயது நிரம்பியவராக இருந்ததாகவும் இவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இராணுவத்தில் 18 வயதுக்கு குறைந்தவர்களை சேர்க்கக்கூடாது என்பது ஐ.நா. சட்டவிதியாகும். கடந்தகால ஆட்சியின்போது விடுத

(10ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே - இன்றைய சிறப்பிதழ் முத்துச் சிதறல், சுயநிர்ணய உரிமை - ஒரு பார்வை

# போரை ஆதரித்த போக்கினால் சந்திரிகாவை விட்டு விலகினோம்!

## மன்னாரில் அமைச்சர் விஜேசேகர

"போருக்கு ஆதரவாகவும், சமாதானத்துக்கு எதிராகவும், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க இயங்கியதால் நானும் பேராசிரியர் பீரிஸ், எஸ்.பி.திஸநாயக்க ஆகிய மூவரும் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்து விலகினோம்" - என்று மீன்பிடி அமைச்சர் மகிந்த விஜேசேகர தெரிவித்தார்.

மன்னார் பேசாலையில் மீனவர்களுக்காக அமைக்கப்பட்ட வீடுகளைக் கையளித்த வைபவத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நாங்கள் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்தோம். அந்த அரசாங்கம் போரை நடத்திக் கொண்டிருந்தது. அதனால் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்து விலகிப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு புதிய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் இணைந்தோம்.

நிரந்தர சமாதானத்திற்காகவே பிரபாகரனும் ரணில் விக்கிரமசிங்கவும் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றனர் என்றார்.

மன்னார் மாவட்ட விடுதலைப் புலிகளின் பொறுப்பாளரை அமைச்சர் சந்தித்தபோது, அமைச்சரிடம் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது. சிங்கள மீனவர்கள் அனுபவிக்கும் உரிமைகளைத் தமிழ் மீனவர்களும் அனுபவிக்க வேண்டும். அத்தோடு மீன்பிடிக் கல்லூரி ஒன்றையும், பிடிக்கப்பட்ட மீன்களைச் சந்தைப்படுத்துவதற்கும் கொழும்பு போன்ற பிரதேசங்களுக்கு எடுத்துச்செல்வதற்கு 24 மணிநேரமும் இராணுவத் தடைகளை நீக்கவேண்டும் என்ற கோரிக்கையும் அப்போது விடுக்கப்பட்டது.

வடமராட்சிப் பகுதியில்

# புகையிலை நாற்று மேடைகள் அமைப்பதில் விவசாயிகள் மும்முரம்!

(வடமராட்சி)

காலபோக மழை ஆரம்பித்ததைத் தொடர்ந்து புகையிலை நாற்று மேடைகள் அமைப்பதில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

வடமராட்சியில் - பொலிகண்டி உடுப்பிட்டி, தொண்டமனாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை போன்ற இடங்களில் நாற்று மேடைகள் அமைக்கும் பணீ ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் உற்பத்தி செய்யும் நாற்றுக்களுக்கே அதிக கிராக்கி உள்ளதால் வலிகாமம், வடமராட்சி, தீவுப் பகுதி போன்ற யாழ்.மாவட்டத்தின் சகல புகையிலை செய்கையாளர்களும் பெரும்பாலும் இவ்விடங்களிலே தரமான நாற்றினைக் கொள்வனவு செய்கின்றனர். கடந்த காலத்தினை விட இவ்வாண்டு புகையிலைச் செய்கை அதிகளவு மேற்கொள்ளப்படும் என பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது. (25)

# உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் புலிகளா? விமல் வீரவன்ச நாடாளுமன்றத்தில் கேள்வி

(கொழும்பு)

"ஒஸ்லோவில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில், நோர்வே அரசாங்கம் விடுதலைப் புலிகளையும் பங்குபற்ற வைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றதா?" - என்று நாடாளுமன்றில் ஜே.வி.பி. உறுப்பினர் விமல் வீரவன்ச கேள்வி எழுப்பினார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்- இலங்கை நோர்வேயின் குடியேற்ற நாடு போன்றும் விதார் ஹெல்கிசன் குடியேற்ற நாட்டுச் செயலாளர் போன்றும் உள்ளார். ஜே.வி.பி. போன்றவர்களின் அழுத்தத்தால் தான் ஜனாதிபதி, நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனின் சந்திப்பை நிராகரித்தார் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# நாவற்குழி மகா வித்தியாலயத்துக்கு ஜீ.ரி.இசற். ரூ. 9 லட்சம் ஒதுக்கீடு

(கொக்குவில் மேற்கு)

கடந்த கால யுத்த நடவடிக்கைகளின்போது சேதமடைந்த நாவற்குழி மகாவித்தியாலய கட்டடப் புனரமைப்புக்காக - ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் 9 லட்சம் ரூபாவினை ஒதுக்கியுள்ளது.

வகுப்பறைப் பற்றாக்குறை, மலசலகூட வசதியீனங்களை நிவர்த்தி செய்யவும் மற்றும் தளபாடக் கொள்வனவுக்காகவும் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் எம்.முத்துலிங்கம் தெரிவித்துள்ளார். (108)

## நீராவியடி முன்பள்ளியில் விளையாட்டுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். சைவ பரிபாலன சபை நடத்தும் முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி நாளை 30ஆம் திகதி புதன்கிழமை 2 மணிககு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இ.ஓங்காரமூர்த்தி தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் - யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் ஞானகாந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

# லஞ்ச ஊழல் ஆணைக்குழு விமல் வீரவன்சவுக்கு விசாரணைக்கு சமுகமளிக்குமாறு உத்தரவு!

(கொழும்பு)

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்சவை லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் முன் ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது.

விமல் வீரவன்சவின் வங்கிக் கணக்குகள் சம்பந்தமாக விளக்கம் பெறவே ஆஜராகும்படி கேட்கப்பட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் பல அமைப்புக்கள், இந்த ஊழல் பற்றி விசாரணை நடத்தும்படி கோரியிருந்தன. அந்த ஆட்சிக்காலத்திலேயே ஜே.வி.பி. பல சொத்துக்களைக் கொள்முதல் செய்துள்ளது.

விமல் வீரவன்சவின் சொத்துக்கள் பற்றித் தெற்கில் லஞ்ச ஊழல் ஆணைக்குழு தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொண்டு வருகிறது.

# தும்புப் பயிற்சிநெறிக்கு; விண்ணப்பிக்குக

## போதனாசிரியர் கோரியுள்ளார்

(சுன்னாகம்)

சுன்னாகம் அரசினர் தும்புப் பயிற்சி நிலையத்திற்கு பயிற்சியாளர்களை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வேலை வாய்ப்பற்ற 25 வயதிற்குட்பட்ட இளைஞர், யுவதிகள் இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம். தகுதியானவர்கள் நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்படுவர்.

விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ போதனாசிரியர், தும்புப் பயிற்சி நிலையம், சுன்னாகம் அல்லது -

பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், உடுவில் எனும் முகவரிக்கோ அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

## மந்துவில் விவசாயிக்கு

(மந்துவில்)

மந்துவில் மேற்கு விவசாய சம்மேளனத்தில் உள்ள ஓர் அங்கத்தவருக்கு சாவகச்சேரி கமநலசேவை நிலைய அனுசரணையுடன் 'லான்ட் மாஸ்ரர்' ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் சேவையை வழங்குவதற்கே இச்சிறிய ரக 'லான்ட் மாஸ்ரர்' இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. (25)

# வழிகாட்டல் ஆலோசனைச் சேவைகள் அடுத்த வருடம் முழுஅளவில் அமுல்

(மானிப்பாய்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளில் "வழிகாட்டல் ஆலோசனைச் சேவை" அடுத்த வருடத்திலிருந்து முழுமையாகச் செயற்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய கல்விச் சீர்திருத்த ஆலோசனைகளின்படி பாடசாலை மட்டத்திலான வழிகாட்டல் ஆலோசனைச் சேவை பற்றி வலியுறுத்தப்பட்டுள்ளது. பரீட்சார்த்தமாக நாட்டின் பிரபல பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த வழிகாட்டல் ஆலோசனைச் சேவைகள், அடுத்த வருடத்திலிருந்து குடாநாட்டுப் பாடசாலைகள் உட்பட நாட்டின் அனைத்துப் பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

மேற்படி இத்திட்டத்திற்கு பட்டப்பின் கல்வி டிப்ளோமா தொழில் தகைமைபெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் அல்லது அதற்கு சமமான தகைமை பெற்ற ஆசிரியர்கள் இதற்குப் பொறுப்பாக நியமிக்கப்படவுள்ளனர்.

600இற்கும் மேற்பட்ட மாணவர் கல்வி கற்கும் பாடசாலைகளில் ஓர் ஆசிரியர் வகுப்பறை கற்பித்தல் கடமையிலிருந்து முழுமையாக விடுவிக்கப்பட்டு வழிகாட்டல் ஆலோசனைச் சேவை மேற்கொள்ள நியமிக்கப்படவுள்ளார்.

மேலும் குறைவான மாணவர் கல்வி கற்கும் பாடசாலைகளில் வாரத்திற்கு 15 மணித்தியாலங்கள் வகுப்பறைக் கற்பித்தல் கடமையிலிருந்து ஆசிரியர் விடுவிக்கப்பட்டு, வழிகாட்டல் ஆலோசனைச் சேவைக்கு நியமிக்கப்படுவார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (100)

# மருதனார்மடம் சந்தை மாரிகாலத்தில் சீர்கேடு!

(வலி.வடக்கு)

மாரி காலத்தில் மருதனார் மடம் பொதுச் சந்தை மிகவும் சீர் கேடாக இருப்பதால் இங்கு வரும் வியாபாரிகளும், நுகர்வோரும் பெரிதும் அசௌகரியமடைவதாக புகார் கூறப்படுகிறது.

யாழ்.குடாநாட்டில் தற்போது பிரபல்யமான ஒரு சந்தையாக விளங்கும் மருதனார்மடம் சந்தைக்கு தினமும் பல பகுதிகளிலிருந்தும் ஏராளமான வியாபாரிகளும், நுகர்வோரும் வருகிறார்கள். காலை 6மணி முதல் 10 மணிவரை வியாபாரம் அமோகமாக இடம்பெறுகிறது.

ஆனால், மழை பெய்தால் சந்தை சேறும், சகதியுமாக கால் வைக்க முடியாத அளவுக்கு சீர்கேடாக இருப்பதாக பொதுமக்கள் புகார் கூறுகிறார்கள். (105)

## கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் வென்றது

யாழ். கல்வித் திணைக்களம் நடத்திவரும் பாடசாலைகளுக்கிடையிலான (18 வயதுக்குக் கீழ்ப்பட்ட) உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்று 28ஆம் திகதி யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திற்கும் யாழ். இந்துக் கல்லூரிக்கும் இடையிலான போட்டியில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. (55)

# எமது பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள் மு.கா. எம்.பிக்கள் ரணிலிடம் முறையீடு

(கல்முனை)

எமது நாடாளுமன்ற வெளிநடப்புப் பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள் என்று முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்தியாளர் குழு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் கேட்டுள்ளது.

பிரதமரை அலரி மாளிகையில் சந்தித்தபோதே அந்தக் குழுவினர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தனர்.

இந்த அதிருப்தியாளர் குழுவில் அதாவுல்லா, நூர்டீன் மன்சூர், இஸ்மாயில், ஹாரிஸ், ரிசாட் பதியுதீன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# நெல்லியடி பஸ் நிலையத்தில் வெள்ளநீர் தேங்கியுள்ளது

(நெல்லியடி)

நெல்லியடிச் சந்தியில் பஸ் தரிப்பிடத்திலுள்ள பள்ளமொன்றில் மழைவெள்ளம் பெருமளவில் தேங்கியுள்ளது. மழைக்காலங்களில் மழைநீரால் நன்கு நிரம்பி வழியும் இந்த பள்ளத்தால் இவ்வழியால் சென்று வரும் பொதுமக்கள் பாதிப்புக்குள்ளாக வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

கடந்த இரு வருடங்களாக இந்த நிலை தொடர்ந்த வண்ணம் உள்ளது. இது குறித்து எவரும் கவனம் எடுக்காத காரணத்தினால் பஸ் நிலையப் பகுதியில் பயணிகள் தங்கி நின்று பயணம் செய்ய முடியாத நிலை உள்ளது. இது தொடர்பாக பிரதேச சபை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை என்பவற்றுக்கு முறையிட்டபோதும் அவர்கள் இப்பகுதி தமது அதிகாரத்திற்குட்பட்டதில்லை எனக் கூறி புறக்கணிப்பதால் - பஸ் நிலையப் பகுதியைச் சீராக்க முடியாதநிலை தொடாகிறது என பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (13)

சீனா, இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட வோஸ் பேசின், கொமேட் செற் வகைகளை பல வர்ணங்களில் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
விமர்சி
27/3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

SRI MURUGAN
உங்கள் உறவினர்களுடன் உலகெங்கும் தொடர்புகொள்ளவும்
அலுவலக வேலைகள் அத்தனையையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளவும்
SRI MURUGAN
303, K.K.S. Road, Jaffna.
T.P. 021-2222670, Fax: 021-2223214
E.mail: del.smskr@eureka.lk

# விடிவை நோக்கிய எழுச்சிப் பேரணியில் வலி-வடக்கு மக்கள் பங்கேற்கவேண்டும்

## வலி. வடக்குப் பொது அமைப்புக்கள் கோரிக்கை

(வலி.வடக்கு)

வலி.வடக்கு மக்களின் விடிவை நோக்கிய எழுச்சிப் பேரணியில் மக்கள் திரள்திரளாகக் கலந்து கொண்டு தமது இதயதாகத்தை எழுச்சி பொங்க எடுத்துக் காட்டு மாறு வலி. வடக்கு, தெற்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாளை புதன்கிழமை மேற்படி ஒன்றியத்தினால் நடத்தப்படவுள்ள பேரணி தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று நேற்றுமுன்தினம் மல்லாகம் பழம் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் நடைபெற்ற சமயமே மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

ஒன்றியத் தலைவர் சி.குமாரவேல் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் வலி.வடக்கு, தெற்கு பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

வலி.வடக்கு மக்கள் சொந்த மண்ணில் வாழ முடியாமல், சொந்த நிலங்களில் விவசாயம் செய்ய முடியாமல், தொழிற்சாலைகளில் கால் மிதிக்க முடியாமல், கடலில் மீன்பிடிக்க முடியாமல், தங்கள் குல தெய்வங்களை வழிபட முடியாமல், தங்கள் கல்வி நிலையங்களில் கல்வி கற்க முடியாமல் - கடந்த 15 வருடங்களாக அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் - புனர்வாழ்வு முகாம்களிலும், மாற்றார் குடிசைகளிலும் அவல வாழ்வு வாழும் நிலைக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்காக இடம்பெறும் மேற்படி பேரணியில் வலி.வடக்கு மக்கள் மிகுந்த எழுச்சியுடன் பங்குபற்ற வேண்டுமென இக்கூட்டத்தில் உரையாற்றியோர் வேண்டுகோள் விடுத்தனர்.

நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு மல்லாகம் பழம் பிள்ளையார் ஆலயத்திலிருந்து பேரணி ஆரம்பித்து துர்க்காபுரம் வரை சென்று வலி.வடக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் மகஜர் கையளிப்பும் பொதுக்கூட்டமும் இடம்பெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச உயர் அதிகாரிகள், மனித உரிமை ஆணைக் குழுவினர் போன்றோரும் இக் பேரணியிலும், பொதுக்கூட்டத்திலும் பங்குபற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (105)

## தரம் 9 பரீட்சையில் 39 ஆயிரம் மாணவர்!

வடக்கு-கிழக்குப் பாடசாலைகளில் தரம் 9 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு - மாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்படும் மாகாணப் பொதுப் பரீட்சை நவம்பர் மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

24 கல்வி வலயங்களையும் சேர்ந்த 38,605 மாணவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர் என்று தெரியவருகின்றது. இவர்களில் 32,400 தமிழ் மொழி மூல மாணவர்களும் அடங்குவர். 959 பாடசாலைகளில் 6205 சிங்களமொழி மாணவர்களும் இந்தப் பரீட்சையில் தோற்றவுள்ளார்கள்.

## 15 வருட அவல வாழ்வு எமக்குப் போதும்; வலி.வடக்கின் மக்கள் அமைப்புகள் அறிக்கை!

(வலி.வடக்கு)

நாளை நடைபெறவுள்ள வலி. வடக்கு மக்களின் எழுச்சிப் பேரணிக்குப் பல்வேறு பொது அமைப்புக்களும் ஆதரவு தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளன.

பளை-கூத்தியவத்தை சனசமூக நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்:- வலி.வடக்கு மக்கள் கடந்த 15 வருடங்களாக அனுபவிக் கும் துன்பவாழ்வுக்கு முடிவுகட்டப் படவேண்டும். அதற்கு வழிசமைக் கும் வகையில் இப்பேரணி அமைய வேண்டும். மக்கள் இப்பேரணியில் கலந்து தமது மனோநிலையைப் பிரதிபலிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

பளை-கூத்தியவத்தை கிராம முன்னேற்றச்சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்:- வலி.வடக்கு மக்கள் கடந்த 15 வருடங்களாக தமது உணர்ச்சிகளை அடக்கி வைத்திருந்தார்கள். ஆனால் இனியும் பொறுக்கமுடியாது என்ற கட்டத்திற்கு இன்று வந்துவிட்டார்கள். தமது உணர்ச்சிகளை வெளிப்படுத்த இப்பேரணி ஓர் வாய்ப்பாக அமைவதால் சகல மக்களும் இதில் பங்கேற்கவேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

இலங்கை இசைவேளாளர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்:- வலி. வடக்கு மக்களின் உணர்வுகளை வெளிக்காட்ட நல்லதோர் சந்தர்ப்பம் கிடைத்துள்ளதால் மக்கள் திரளாகக் கலந்து பேரணி வெற்றிபெற உதவ வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.(105)

## சட்டப்படி வேலை இயக்கத்தில் குதிக்கிறது அரச சேவை ஐக்கிய தாதிமார் சங்கம்!

சம்பள ஏற்றத்தாழ்வைக் கண்டித்து தாதிமார் சங்கம் நவம்பர் மாதம் 1ஆம் திகதி தொடக்கம் தீர்வு கிடைக்கும் வரை புதிய நேர ஒழுங்கில் கடமையில் ஈடுபடவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இதன்படி காலை 8 மணிக்கு கடமைக்கு வரும் தாதிய உத்தியோகத்தர்கள் மாலை 4 மணியுடன் தமது கடமைகளை முடித்துக் கொள்வதுடன், இரவுக் கடமைக்கு தாதியர்கள் தேவைப்படுமிடத்து சுழற்சி முறையில் வைத்தியசாலை பொறுப்பதிகாரியால் தாதிய உத்தியோகத்தர்கள் கடமைக்கு அழைக்கப்படல் வேண்டுமெனவும் கேட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தாதிமார் சங்கம் தீர்மானித்ததற்கான காரணம் சுகாதார அமைச்சின் சம்பள உயர்வு சம்பந்தமான சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட சம்பள வேறுபாடின்மையே காரணமாகும்.

எனவே - சகல வைத்தியசாலைகளிலும் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர்களும் நவம்பர் 1ம் திகதி தொடக்கம் புதிய நேர ஒழுங்கில் வேலைசெய்ய இருப்பதாக சங்கத்தின் தலைவர் முத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

## இந்திய வம்சாவழித் தமிழர்நிலை பற்றி தமிழ்நாடு சட்டசபையில் பேசுவேன்

### ஹற்றனில் திருமாவளவன் பேச்சு



(நமது நிருபர்)

இலங்கையில் இந்திய வம்சாவழி தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும், அந்த மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாடு குறித்தும், இந்திய பாராளுமன்றம் மற்றும் தமிழக சட்ட சபையில் பேசுவதற்கான நடவடிக்கை எடுப்பதாக தமிழ்நாடு விடுதலைச் சிறுத்தை அமைப்பின் தலைவரும், தமிழக சட்டசபை உறுப்பினருமான திருமாவளவன் தெரிவித்தார்.

ஹற்றன் இந்து மகாசபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்குத் தமிழ்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை மாத்திரமே தமிழக மக்கள் முழுமையாக அறிந்திருக்கிறார்கள். ஆனால் மலையகத் தமிழ்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அவர்களுக்குத் தெரியாது. மலையகத் தமிழ்மக்கள் கல்வி, வேலைவாய்ப்பு போன்ற பல்வேறு விடயங்களில் பின்தங்கி உள்ளவர்களாக உள்ளனர். மலையகத் தமிழ்மக்கள் உரிமை பெற்றவர்களாக வாழ வேண்டுமானால் அரசியல் ரீதியான போராட்டமே முன்னெடுக்க வேண்டும். ஈழப்போராட்டத்தின் அடிப்படை, மலையகத் தமிழ்மக்களின் வரலாற்றின் பின்னணியில் இருந்து ஆரம்பமாகியது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## இஸ்ரேலிய நிபுணர் குழு அறிக்கை சமர்ப்பிப்பு!

(கொழும்பு)

விமானப்படை கிபிர் விமானம் விபத்துக்குள்ளானது தொடர்பாக விசாரணை செய்வதற்கு வந்த இஸ்ரேலிய மூன்று உறுப்பினர் குழு அறிக்கையைச் சமர்ப்பித்து விட்டு கடந்த 27 ஆம் திகதி தாயகம் திரும்பியது.

இதேவேளை, விமானப்படைத் தளபதி நான்கு பேர் கொண்ட குழுவை விசாரணை செய்வதற்கு நியமித்துள்ளார். இதற்கு கப்டன் ஹார்சா அபேவிக்கிரம தலைமை தாங்கி வருகிறார்.

### யாழ்.நூலகத்துடன் எரிக்கப்பட்ட

## மத்திய கல்லூரி மண்டபத்தின் புனரமைப்புக்கு ரூ. 45 லட்சம் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் றொமெயின் குக் மண்டபத்தை புனரமைக்க கல்வி அமைச்சு 45 இலட்சம் ரூபாவை உடனடியாக ஒதுக்கியுள்ளது.

நீண்டகாலப் பழமைவாய்ந்த இக்கட்டடம் கல்லூரியின் மிகப் புகழ் பூத்த கல்லூரி நூலகமாக இயங்கி வந்தது.

1983 ஆம் ஆண்டு யாழ்ப்பாண பொது நூலகம் எரிக்கப்பட்ட அதே நாள் இந்நூலகப் புத்தகங்களும் எரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மத்திய கல்லூரியின் 180 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை ஒட்டி 1996.09.07 ஆம் திகதி இக்கட்டடத்தின் முன்னைய தோற்றத்தைக் கொண்ட படம் தபால் திணைக்களத்தால் முத்திரையாக வெளியிடப்பட்டது.

இதற்கான நிதி ஒதுக்கீட்டுக்காக கல்லூரியின் அதிபர் க.இராசதுரை கல்வி அமைச்சருடன் நேரடியாகவும், பிரதமருடனும் தொடர்பு கொண்டும் எடுத்த பெருமுயற்சியின் பலனாக இவ்வளவு பெருந்தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. நீண்ட காலமாக கல்லூரியின் பழைய மாணவர்களதும், பெற்றார்களதும் ஆவல் இதன்மூலம் இன்று நிறைவேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### போதிய வசதிகளின்றி இயங்கும்

## இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு நியூசிலாந்து அரசாங்கம் உதவி வழங்கும்!

(கொழும்பு நிருபர்)

மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்குப் போதிய நிதி உதவிகள் செய்து கொடுக்கப்படாமையால் அதன் விசாரணைகள், செயற்பாடுகள் முடக்கமடைந்திருக்கின்றன. இந்நிலையைப் போக்குவதற்கு நியூசிலாந்து அரசாங்கம் உதவி வழங்க முன்வந்துள்ளது.

மனித உரிமைகள் ஆணைக் குழு பிராந்திய ரீதியாக அலுவலகங்களை அமைத்துச் செயற்படுகின்றபோதும், அரசாங்கம் போதிய நிதி ஒதுக்கீடுகளைச் செய்யவில்லை. இதனால் பிராந்தியக் கிளைகளில் போதிய ஆளணி, வாகன வசதிகளின்றி மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு செய்யப்படும் முறைப்பாடுகளை விசாரணை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மனித உரிமை ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள இந்த மந்த நிலையைப் போக்குவதற்கு நியூசிலாந்து அரசாங்கம் உதவ முன்வந்திருக்கின்றது. இவ் உதவிகள் தொடர்பாக ஆராயும் நோக்கில் நவம்பர் மாத இறுதியில் நியூசிலாந்திலிருந்து உயர்மட்டக் குழுவொன்று கொழும்புக்கு வரவுள்ளது.

இந்த உயர் மட்டக்குழுவே இலங்கையில் மனித உரிமைகள மேம்பாட்டுக்காக எவ்வளவு நிதியை ஒதுக்கீடு செய்வதெனத் தீர்மானிக்கும்.

இலங்கையின் மனித உரிமைகள் பேணப்படும் நிலையில், ஏறபட்டுள்ள முன்னேற்றத்தின் அடிப்படையிலேயே நியூசிலாந்து அரசாங்கம் உதவியளிக்க முன்வநதிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

## சமாதானத்தை ரணில் அரசு வெற்றிகரமாக முன்னெடுக்கிறது!

### எதிர்த்தரப்பிலுள்ள ரிச்சர்ட் பத்திரன பாராட்டு

(கொழும்பு)

'கடந்த ஆட்சிக்காலத்தில் உரிய முறையில் முன்னெடுக்கப்படாத சமாதான முயற்சிகள் தற்போதைய அரசினால் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.' இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரும் அக் கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவருமாகிய ரிச்சர்ட் பத்திரன தெரிவித்துள்ளார்.

அனைவரும் அரசின் சமாதான முயற்சிக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்றும், இதற்காகவே தான் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஹக்மீமன தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து விலகிக்கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஹிக்கடுவப்பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே ரிச்சர்ட் பத்திரன இவ்வாறு தெரிவித்தார்.

## கடற்தொழிலாளர்களுக்கு புதிய அடையாளஅட்டை விநியோகம்

கடற்தொழில் செய்வோருக்கான புதிய அடையாள அட்டை கடற்தொழில், நீரியல் வளத்துறை திணைக்களத்தினால் துரிதமாக வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வடையாள அட்டையே இனி வரும் காலங்களில் இராணுவப் பாஸ் நடைமுறைக்குப் பதிலாக பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்படுகின்றது. (55)

## யாழ். நகர கரையோரப்பகுதியில் 63 குடிசைகளை கியூடெக் அமைக்கும்!

(யாழ்ப்பாணம்)

அண்மையில் மீளக்குடியமர்ந்து கொண்ட யாழ். நகரக் கரையோரப் பகுதியைச் சேர்ந்த சுமார் அறுபத்து மூன்று குடும்பங்களுக்கு குடிசை அமைப்பதற்கு உதவி வழங்கப்பட்டுள்ளது.

மனித முன்னேற்ற நடுநிலையத்தின், உதவித் திட்டத்தின் ஒரு பகுதியாகவே இக்குடும்பங்களுக்கு மேற்படி உதவி வழங்கப்பட்டுள்ளது.

சுமார் எண்ணாயிரம் ரூபா பெறுமதியான கிடுகு மற்றும் மரங்கள் போன்ற பொருட்கள் இக்குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மிகவும் வறுமை நிலையில் உள்ள குடும்பங்கள் விசேடமாக இவ்வுதவித் திட்டத்துக்காக தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## நாய் கடித்த மாணவன் 3 மாதங்களின் பின் மரணம்!

(வண்ணை)

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் நாய்க்கடிக்குள்ளான புனிதர் சாள்ஸ் மகாவித்தியாலய க.பொ.த. (சா./த.) மாணவன் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்றுமுன்தினம் அங்கு மரணமானார்.

சென். பற்றிக்ஸ் வீதி, குருநகரைச் சேர்ந்த பாக்கியராசா மக்டொனால்ட் (வயது 17) என்பவரே மரணமானவர் ஆவார். யாழ். போதனா வைத்திய சாலையில் இடம்பெற்ற மரண விசாரணைகளையடுத்து சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (111)



நச்சுவாயுத் தாக்குதலின் பின்னர் இறந்துகிடப்பவர்களையும், மயங்கிய நிலையில் அகப்பட்ட தற்கொலைப் போராளியையும் படங்களில் காணலாம்.

# பணய நாடக இறுதிக்கட்டத்தில் 117 பேர் நச்சுவாயுவால் மடிந்தனர்!

## இருவர் மட்டுமே துப்பாக்கிச்சூட்டில் பலி!!

(மொஸ்க்கோ)

மொஸ்க்கோ பணயக்கைதிகள் நாடகத்தில் கொல்லப்பட்டவர்களில் இருவர் மட்டுமே துப்பாக்கிச்சூட்டில் இறந்துள்ளனர். மிகுதிப்பேர் அனைவரும் நச்சுவாயுவினால் பாதிக்கப்பட்டே மடிந்தனர் என்று மொஸ்க்கோவிலுள்ள மருத்துவ நிபுணர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதுவரை இத்துயர நிகழ்வில் நூற்றுப்பத்தொன்பது பேர்வரை கொல்லப்பட்டனர். அதில் இருவர் துப்பாக்கிச்சூட்டிலும் மிகுதி நூற்றிப்பதினேழு பேர் வரை நச்சு வாயுவாலும் மடிந்தனர். கொல்லப்பட்ட தற்கொலையாளிகள் ஐம்பது பேரில் எத்தனை பேர் நச்சு வாயுவால் கொல்லப்பட்டனர் என்பது தெரியவில்லை.

மொஸ்கோ நகரின் பிரபலமான மருத்துவ நிபுணர் அன்றி செல்ற் சொவஸ்கி, மருத்துவ சிகிச்சைக்குட்பட்டுள்ள அறுநூற்று நாற்பத்தாறு பேரில், நூற்றுஐம்பது பேர் அவசர சிகிச்சைப் பிரிவில் தொடர்ச்சியான பராமரிப்புக்குட்பட்டுள்ளனர் என்றும்• இவர்கள் இன்னமும் ஆபத்தான கட்டத்தை தாண்டவில்லை என்றும் கூறினார். மேலும் நச்சுவாயுவால் மிகத்தீவிரமாகப் பாதிக்கப்பட்ட நாற்பத்தைந்து பேர் மிகமோசமான கட்டத்தில் உள்ளனர் என்றும் தெரிவித்தார்.

அதேவேளை, நேற்றய தினத்தை ரஷ்ய ஜனாதிபதி துக்கதினமாகப் பிரகடனப்படுத்தியிருந்தார். ரஷ்யர்கள் நச்சுவாயுவால் கொல்லப்பட்ட தமது நாட்டுப் பிரஜைகளை துயரத்துடன் நினைவு கூர்ந்தனர்.

துப்பாக்கிச் சண்டையில் அகப்பட்டு பணயக்கைதிகள் சாகவில்லை என்பதும், நச்சுவாயுவினாலேயே அவர்கள் மடிந்தனர் என்பதும் ரஷ்ய ஜனாதிபதிக்கு தீவிர சங்கடங்களை உருவாக்கும் செய்தியாக உள்ளது. மேலும் அவரது புகழுக்கு விழுந்த கீறல்களாவும் கருதப்படுகின்றது.

ஓகஸ்ட் 2000ஆம் ஆண்டில் அணுவாயுதங்கள் பொருத்தப்படக்கூடிய நீர்மூழ்கிக்கப்பல் (**The nuclear submarine Kursk**) சமுத்திரத்தின் நடுவில் வெடித்து மூழ்கிய விபத்தில் 118 பேர் கொல்லப்பட்டதையடுத்து புட்டின் மிகுந்த நெருக்கடிகளைச் சந்தித்திருந்தார். அதற்கு அடுத்து அவர் சந்திக்கும் சவாலாக நச்சு வாயுத்தாக்குதல் கொலைகள் அமைகின்றன.

### நச்சுவாயுப் பிரயோகம் பற்றி கருத்துக்கூற அமெரிக்கா மறுப்பு

(வொஷிங்ரன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் வில்லியம் புஷ்ஷின் பேச்சாளர் ஒருவர் - ஒரு பெரும் துயரம் என மொஸ்க்கோ பணயக்கைதிகள் நாடகத்தை விபரித்தார். பணய நாடகத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ரஷ்யா நச்சுவாயுவைப் பிரயோகித்தமை பற்றி அப்பேச்சாளர் கருத்துக்கூற மறுத்துவிட்டார்.

"சந்தர்ப்பம் சூழ்நிலைகளையும் ஏனைய உண்மைகளையும் நாங்கள் அறியவில்லை. பயங்கரவாதிகள் கடுமையாகவே நின்றனர். அவர்கள் அரங்குக்குள் கண்ணிவெடிகளைப் பொருத்தி அனைவரையும் கொல்ல முனைந்தனர்" என அவர் தெரிவித்தார்.

# முடிவில்லாத விவாதத்தில் தொடர்ந்து ஈடுபட முடியாது!

## கொலின்பவல் அறிவிப்பு

(வொஷிங்ரன்)

ஈராக் தொடர்பாக அமெரிக்கா, ஐ.நா.வில் சமர்ப்பித்த வரைவுக்கு ஆதரவு பெறமுடியாத நிலை பாதுகாப்புச் சபையில் நிலவுகிறது.

இந்நிலையில் - "முடிவுகாணப்பட முடியாத ஒரு விவாதத்தில் நாங்கள் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டு இருக்கமுடியாது" என அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

மெக்ஸிக்கோவில் ஆசிய பொருளாதார உச்சி மாநாட்டில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அதேவேளை, அமெரிக்கா தனது வரைவுகளுக்கு ஆதரவு திரட்டத் தவறியுள்ளதால், பிரான்ஸ் தனது சொந்த வரைவுகளை சமர்ப்பிக்க முனையும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான அறிவிப்பை பிரான்ஸ் அமெரிக்காவுக்கு அனுப்பியுள்ளது.

அதேவேளை, ஈராக்குக்கு எதிராக தாக்குதலை ஆரம்பிப்பதில் நிலவும் தாமதம் - அமெரிக்க மக்களிடம் போருக்கு எதிரான உணர்வுகள் ஸ்திரப்பட உதவும் என புஷ் அஞ்சுகிறார்.



பணய நாடகத்தில் நச்சுவாயுவால் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் கதறியழும் காட்சி.

# இந்தோனேஷியப் பொலீஸாரும் ஆர்ப்பாட்டக்காரரும் மோதல்!

(ஜகார்த்தா)

அபு பேக்கர் பாசியர் (**Abu Bakar Ba'asyir**) எனும் தீவிர இஸ்லாமியவாத பிரசங்கி ஒருவரின் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்களுடன் இந்தோனேசிய பொலிஸார் மோதலில் ஈடுபட்டனர். இவர் இரு வாரங்களுக்கு முன்பு சுவாச நோய் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பாலித்தீவு குண்டுவெடிப்புடன் தொடர்புடையதாகக் கருதப்படும் ஜெம்மா இஸ்லாமிய அணியின் அனுதாபியாக அபு பேக்கர் பாசியர் செயற்பட்டு வந்துள்ளார் என்று இந்தோனேசியப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அதன் காரணமாக மருத்துவ மனையிலிருந்து அவர் பொலிஸாரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டார்.

இதனைக் கண்டித்து அவரது ஆதர வாளர்கள் பொலிஸாருக்கு எதிராக வன்முறை ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டபோது இம்மோதல்கள் ஏற்பட்டன.

# வியட்னாமில் பயன்படுத்தப்பட்ட நச்சுவாயு ரகமே ரஷ்ய இராணுவத்தால் பிரயோகிக்கப்பட்டது!

(மொஸ்கோ)

மொஸ்கோ திரையரங்கு மீது பிரயோகிக்கப்பட்ட நச்சுவாயுவின் ரகத்தை முதன்முதலில் அமெரிக்க இராணுவம் வியட்நாமில் 'வியட் கொங்' கெரில்லாக்கள் மீதே பயன்படுத்தி இருந்தது என்று இரசாயன ஆயுதங்கள் தொடர்பான மேற்கு நாட்டு நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

வியட்நாமிய போரில் கர்ப்பிணி தாய்மார்கள்கூட, தமது ஏனைய சிறு குழந்தைகளுடன் களத்தில் நின்று போராடத் துணிந்த வேளையில் அவர்கள் மீது அமெரிக்க இராணுவம் இதே ரக நச்சு வாயுவை பிரயோகித்து தோற்கடிக்க முற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஒரு நச்சு வாயுவை தனது சொந்த மக்கள் மீது பிரயோகிக்க ரஷ்ய ஜனாதிபதி முடிவெடுத்தமை துரதிஷ்டகரமானது என்றும், இதனை ஒரு இரசாயன ஆயுதப் பிரயோகம் என்றே கூறவேண்டும் என்றும் ரஷ்ய நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

# காஷ்மீரில் 'பொடா' சட்டமில்லை முதல்வர் முகமது அதிரடி அறிவிப்பு!

(காஷ்மீர்)

காஷ்மீரில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சி நவம்பர் 2-ந்தேதி பதவி ஏற்கவுள்ளது. காஷ்மீரில் பொடா சட்டம் அமுல்படுத்தப்படாது; அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்று முதல்வராக பதவி ஏற்க உள்ள முப்தி முகமது அறிவித்துள்ளார்.

காஷ்மீரில் புதிய ஆட்சி அமைப்பது குறித்து காங்கிரஸ் -மக்கள் ஜனநாயகக் கட்சிகள் இடையே உடன்பாடு ஏற்பட்டது தெரிந்ததே. மக்கள் ஜனநாயக கட்சித்தலைவர் முப்தி முகமதுவை காஷ்மீர் முதல்வராக சோனியா காந்தி நேற்று முன்தினம் அறிவித்தார். காங்கிரஸை சேர்ந்த ராம்சர்மா துணை முதல்வர் ஆகிறார்.

இந்த நிலையில் காங்கிரஸ் - மக்கள் ஜனநாயகக் கட்சிக் கூட்டின் குறைந்த பட்ச பொதுத்திட்டம் டெல்கியில் நேற்று வெளியிடப்பட்டது.

# இஸ்ரேலிய அரசாங்கத்துக்குள் பிளவு! விரைவில் பொதுத் தேர்தல் நடக்கலாம்?

(டெல்அவிவ்)

இஸ்ரேலில் ஆளும் கூட்டரசாங்கத்துக்குள் வரவு-செலவு திட்டம் தொடர்பாக கருத்து முரண்பாடுகள் எழுந்துள்ளன.

இஸ்ரேலில் பிரதமர் ஏரியல் ஷரோனின் தீவிர வலது சாரிக் கட்சியான லிக்குட் கட்சியும் இஸ்ரேலின் தற்போதைய பாதுகாப்பு அமைச்சர் பென்யமின் பென் எலிசர் தலைமையிலான தொழிற்கட்சியும் இஸ்ரேலிய அரசாங்கத்தை அமைத்துள்ளன.

வரவு-செலவுத் திட்டத்தின் சமூக நலன்புரிச் சேவைகளுக்கான நிதி ஒதுக்கீட்டை யூதக் குடியேற்றங்களைப் பலப்படுத்தும் நடைமுறைகளுக்கு செலவு செய்வதற்கு பிரதமர் ஷரோனின் லிக்குட் கட்சியினர் விரும்புகின்றனர். இதற்கான முன் மொழிவுகள் அடங்கும் 2003 ஆம் ஆண்டுக்கான வரவு செல்வுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிக்க தொழிற் கட்சியின் மத்திய குழு தீர்மானம் எடுத்துள்ளது.

நாளை நடைபெறவுள்ள வரவு செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு பிரதமருக்கு தோல்வியாகவே கருதப்படும்.

அத்துடன் 90 நாட்களுள் புதிய தேர்தலுக்குரிய அறிவிப்பை இஸ்ரேலிய அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகவலம்

# பிரேஸில் ஜனாதிபதியாக இடதுசாரி லூலா!

(றியோடி ஜெனிரோ)

பிரேஸிலில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இடதுசாரித் தொழிற்சங்கவாதியான லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா வெற்றி பெற்றுள்ளார்.

இவருக்கு எண்ணப்பட்ட 90% ஆன வாக்குகளில் 61% மான வாக்குகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளுக்கு இணங்க பொருளாதாரக் கொள்கையை வகுத்துச் செயற்பட்டதால், பிரேஸில் பொருளாதாரத்தில் ஏழை - பணக்காரர் இடைவெளி அதிகரித்துள்ளது என்ற கருத்தைக் கொண்டிருக்கிறார் லூலா.

அமெரிக்க அரசாங்கமும் இவரது வெற்றிக்கு வாழ்த்துகள் தெரிவித்துள்ளது.



# வானத்திலும் இனி Taxi கள் உலாவரும்





வீதிப்போக்குவரத்து நெருக்கடிகள் அதிகரித்துவரும் இக்காலத்தில் ஆகாய வழிப் போக்குவரத்துத்தான் எதிர்காலத்தில் கைகொடுக்கும். இதற்கான முயற்சியில் அமெரிக்க-பிரிட்டிஷ் விமான நிபுணர்கள் இறங்கியுள்ளனர். சாதாரண பொதுமக்களும் ஆகாய வழியாக விமான taxi யில் *(AIR TAXI)* பயணிக்கக் கூடிய வகையில் சிறிய விமானங்கள் பரீட்சார்த்தமாக உருவாக்கப்பட்டு வருகின்றன.

இதில் 'அலாரிஸ்' எனப் பெயரிடப்பட்ட விமானத்தை இடது பக்கப் படத்தில் காண்கிறீர்கள்.வேர்ஜீனியா பல்கலைக்கழக பொறியியல் பீடத்தினர் இந்த சிறு விமானத்தை உருவாக்கியுள்ளனர்.

வலது பக்கப் படத்தில் காணப்படுவது லேயிஸர்ஸேயர் பல்கலைக்கழகம் உருவாக்கிய 'எக்லோஸ்' எனும் விமானமாகும் இதன் சிறப்பம்சம் அதன் பெட்டி வடிவிலான இறக்கையாகும்.




# சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த சார்லி சாப்ளின்

**அரங்கம்- 04**



ஹன்னா ஒரு வியக்கத்தக்க பெண்மணி. மற்றவர்களின் எதிர்பார்ப்புக்கு மாறாகத் தன் மகன்களுக்கு மீண்டும் ஒரு வீடு அமைக்க அவள் முழுவதும் தயாராகி விட்டாள். அவர்கள் ஊறுகாய்த் தொழிற்சாலைக்குப் பின்புறமும் கசாப்புக் கடைக்குப் பக்கத்திலும் உள்ள ஓர் அறைக்குக் குடி போயினர். அங்கிருந்த முடை நாற்றம் தாங்க முடியாததாக இருந்தாலும், அவர்கள் மறுபடியும் ஒன்று சேர்ந்திருந்தனர். மீண்டும் அச்சிறுவர்களை தன்னிடம் அனுப்பாமலிருப்பதற்காகவோ என்னமோ சார்லஸ், ஹன்னாவிற்கு கொஞ்சம் பணம் கூட அனுப்பியிருந்தார்.

விருப்பத்திற்கு மாறாக சார்லி பள்ளிக்கு அனுப்பப்பட்டான். எழுதுவதிலும் படிப்பதிலும் அவன் சிறந்து விளங்காவிட்டாலும் அவனுக்கு பெருமைக்குரிய தருணம் ஒன்று வந்தது. 'மிஸ் ப்ரிஸில்லாஸ் கேட்' என்ற பகுதியை அவன் ஒப்புவித்த முறை அந்தப் பள்ளி முழுவதும் அவனுக்கு பெயர் வாங்கித் தந்தது. எல்லோரும் அவன் திறமையை ரசிக்க அவன் ஒவ்வொரு வகுப்பாக அழைத்துச் செல்லப்பட்டான். திடீரென்று அவன் இழித் தோற்றமான சிறுவனாக இல்லாமல் கொஞ்சம் மதிப்புள்ளவனாக மாறி வருவதை உணர்ந்தான்.

ஆனால் 25.11.1898 அன்று சார்லி பள்ளியை விட்டு நிரந்தரமாக வெளியேறி விட்டான். அப்போது அவன் வயது ஒன்பது. அவனுடைய குழந்தைப்பிராயம் முற்றுப்பெற்று விட்டது.

ஹன்னா குடும்பத்தைக் காப்பாற்ற வெளி வேலைகள் செய்து வந்தாள். வாரத்திற்கு ஒருமுறை அவள் முதலாளி, வெட்டப்பட்ட ஜாக்கட் துணிகளின் மூட்டையைக் கொண்டு வந்து கொடுத்தார்.

தையல் இயந்திரத்தின் சக்கரமும் சுழலும் தான் அவர்களை காப்பாற்றி வந்தது. ஹன்னா கொஞ்சம் பின்தங்கி விட்டால் கூட தையல் இயந்திரத்துக்கு வாடகை கொடுப்பதென்பதோ அவர்கள் வாழ்வதோ முடியாத ஒன்றாகி விடும்.

அவர்களிடம் பணம் இருக்கும் நேரங்களில் சிறிய அளவில் உணவு வாங்கினார்கள். இரவு உணவிற்காக அச்சிறுவர்கள் செங்குத்தான மாடிப்படிகளில் சடசடவென ஒலி எழுப்பிய படி இறங்கிச்சென்று பானையில் வைக்கப்பட்டிருந்த காய்கறிகளும், இறைச்சித்துண்டுகளும் வாங்கி வந்தனர். அல்லது குளிர்ந்து போன இறைச்சியுடன் உட்கொள்ள கொஞ்சம் ஊறுகாய் வாங்கி வந்தனர். நாட்பட்ட கேக்குகள் வாங்கினால் அது பெரிய விருந்தாகக் கருதப்பட்டது.

சிட்னியின் ஊதியமும் அவர்களுக்கு உதவியது. வழக்கம் போல் சுறுசுறுப்பான புத்திசாலியான அவன் தற்போது சீருடையும் பில்பாக்ஸ் தொப்பியும் அணிந்து கொண்டு தந்திகள் விநியோகம் செய்பவனாக வேலை பார்த்து வந்தான்.

தானும் பணம் சம்பாதிக்க வேண்டும் என்று சார்லிக்கு நன்றாவே புரிந்தது. ஆனால் மனம் ஒரு தீர்மானத்தில் இருந்தது. மேடைக்கால வாழ்க்கை மென்மையானதல்ல என்பதனை அவனுடைய வளர்ப்பு முறை நன்றாகவே அவனுக்கு உணர்த்தியிருந்தாலும் சார்லி அதைத் தான் வேண்டினான். மக்களை மகிழ்விக்கும் கலைஞனாக இருப்பதையே விரும்பினான்.

சார்லஸின் குடிப்பழக்கம் அவருடைய உண்மையான வெற்றி வாய்ப்புக்களை அழித்துக் கொண்டிருந்தாலும் அவர் இன்னமும் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டுதானிருந்தார். அவர் ஒரு தலைசிறந்த தந்தையாக இல்லாதிருந்தாலும், தனக்கு எந்தவித இழப்புமின்றி தன் மகனுக்காக அவரால் இத்தருணத்தில் ஏதேனும் செய்ய முடிந்தது.

வில்லியம் ஜக்சன் என்பவர் மிதியடிக்கட்டைகளின் மூலம் தடை ஆட்டம் வழங்கும் குழந்தைகளின் குழுவை நடாத்தி வந்தார். அவரைச் சம்மதிக்க வைத்து சார்லியை அக்குழுவில் சேர்த்துவிட்டார் சார்லஸ். அக்குழுவின் நிகழ்ச்சிகள் சாதாரணத்திலிருந்து சற்று மாறுபட்டு இருந்ததால் அரங்குகளில் பெருவெற்றியைப் பெற்றுத்தந்தது.

சார்லி அக்குழுவில் சேர்ந்தது ஒரு அதிர்ஷ்டம். அன்புள்ளம் கொண்ட ஜாக்சன் தன் குழுவின் சிறுவர்களை நல்ல முறையில் கவனித்துக் கொண்டுதோடு தொழில் முறை கண்டிப்பையும் நிகழ்ச்சிகளில் உயர் தரத்தையும் வலியுறுத்தினார். எதிர்காலத்தில் மேடைகளில் பிரகாசிக்க அது ஒரு அருமையான அத்திவாரம். ஒத்திகைகள், பகல் காட்சிகள் மற்றும் மாலைக்காட்சிகள் எல்லாம் சேர்ந்து அச்சிறுவர்களை களைப்புக்குள்ளாக்கும். ஆனால் அவர்கள் தொழில் முறைக்கலைஞர்கள். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை சிரித்தபடியே வழங்குவதுதான் அவர்கள் வேலை. அவர்களுடைய நடனம் சற்று மிளிரத்தவறினால் உடனே ஜாக்சன் மேடையில் உட்புறத்திலிருந்து கைகால்களை ஆட்டி செய்கையின் மூலம் அவர்களை உற்சாகப்படுத்துவார். மறுகணமே அவர்கள் முகத்தில் சிரிப்பலைகள் எழும்பி வரும். அந்தநாளின் தலைசிறந்த கலைஞர்களுக்கு சரிசமமாக லாங்கேஷயர் சிறுவர்களும் புகழேணியில் இருந்தார்கள். சார்லி தான் பார்த்ததை எல்லாம் தனக்குள் சேமித்துக் கொண்டான்.

உருமாறும் காட்சிகளும் பறக்கும் பேலேக்களும் மினுமினுக்கும் ஆடைகளும் சிரிக்க வைக்கும் நகைச்சுவைகளும் கலந்து ஆர்ப்பாட்டமாக கிறிஸ்மஸ் கழிந்தது. அரக்கனின் அரசன் நட்சத்திரப்பொறியிலிருந்து விடுபட்டுமே சிவப்புப் புன்னகையின் மின்னலில் பொங்கி எழுந்தான். தேவதைகளின் அரசி பாந்தமாக மேலிருந்து கீழே இறங்கி வந்தாள்.

(அடுத்த அரங்கில் தொடரும்)

## வன அழகு- 2002 புகைப்படப் போட்டியில் சிறந்த படங்களாக தெரிவு செய்யப்பட்ட சிலவற்றையே இங்கு காண்கிறீர்கள்.




கென்யாவைச் சேர்ந்த அன்கிஸ் கொட் இந்தப் புகைப் படத்தை எடுத்துள்ளார். அழகான நீர்ப்பரப்பில் ஆபிரிக்க யானை க்குடும்பம் ஒன்று பயணம் செய்கிறது.




அமெரிக்கப் புகைப்படக்காரரான சார்லஸ் மக்ரா எடுத்த இப்புகைப்படத்தில் பிறவுண் கரடி வாயில் மீனொன்றைக் கௌவியபடி காட்சி தருகின்றது.



நீருக்கு அடியிலும் ஒரு உலகம் இருக்கிறது. அந்த உலகத்தின் இரண்டு நாயகர்களைத் தத்ரூபமாகப் படம் பிடித்தவர் டக் அலன். இவர் பிரித்தானியாவைச் சேர்ந்தவர்.

## மீன் வடிவில் உளவு நீர்மூழ்கி



நீரினடியில் செல்லக்கூடிய ஆளில்லாத வேவு நீர்மூழ்கி ஒன்றையே இங்கு காண்கிறீர்கள். அமெரிக்க கடற்படையின் உற்பத்தியான இந்த வேவுக்கப்பல் நீரினடியில் ஒரு சுறா மீன் போன்று நெளிந்து நீந்திச் செல்லக்கூடியது. வெடி மருந்துகளை கண்டறிதலே இதன் பணியாகும்.

## போயிங்777 ஆயத்தம்



போயிங் 777 எனும் புதிய இராட்சத விமானத்தின் உற்பத்தி நிறைவடைந்து விட்டது ஜனவரி மாதம் இதன் முதல் பறப்பு நடைபெறும். உலக நாடுகளுக்கான விற்பனை 2004 மார்ச் மாதமளவில் நடைபெறும் இந்த இராட்சத.விமானங்களை கொள்வனவு செய்வதில் முண்டியடிப்பது ஜப்பானிய, பிரெஞ் விமான சேவைகளாகும்.

# ரோபோக்கள்






ரோபோக்கள் தயாரிப்பில் ஜப்பானியத் தொழில் நுட்பவியலாளர்களே முன்னணியில் இருக்கிறார்கள்.

எதற்கெடுத்தாலும் ரோபோவை உருவாக்கிப் பார்ப்பதில் அவர்களுக்கு அலாதிப் பிரியம் போலும்.

சின்னஞ்சிறிய ரோபோக்களைத் தயாரித்து சந்தைக்கு விடுவது இப்போது அதிகரித்து வருகின்றது. அருகில் உள்ள படங்களில் ரோபோக்களின் பிந்திய சில வடிவங்களைக் காணலாம்.

நீங்களும்ஒரு ரோபோவை வாங்கிக் கொள்ளலாம் என ஆசை வருகிறதா?










# விவாக வாழ்வும் ஆயத்தமும்

நாம் ஒரு வியாபாரத்தைத் தொடங்குவதற்கு முன் ஆயத்தம் செய்கிறோம். பரீட்சை எழுதுவதற்கு முன் ஆயத்தம் செய்கிறோம். அதேபோன்று திருமணத்திற்கு முன்பும் ஆயத்தம் செய்கிறோம்.



நாம் எப்படிப்பட்ட ஆயத்தத்தைச் செய்கிறோம்? உடை தயாரிக்கிறோம். உணவு தயாரிக்கிறோம். எங்கு? எப்படிச் செய்வது? என்று ஆயத்தம் செய்கிறோம். ஆனால் இருவரும் சேர்ந்து வாழ்வதற்குத் தேவையான மன ஆயத்தத்தில் அதிக கவனம் செலுத்துவதில்லை. இதனால் திருமணம் முடித்துச் சில காலத்திற்குள் திருமண வாழ்வு கசக்கத் தொடங்குகிறது. அந்த நேரத்தில் உறவு முறிகிறது. சிலர் விவாகரத்துக்கு ஆசைப்படுகின்றனர். திருமணத்திற்கு முன் இவர் இப்படி இல்லையே என்று கலங்குகின்றனர்.

விவாக வாழ்வு என்பது அர்ப்பணிப்பு தொடர்புள்ள வாழ்வாகும். அதாவது விவாக வாழ்வுக்கு மாறாத, உறுதியான தொடர்பு தேவை. கணவன் மனைவி இருவரும், ஒருவர் மற்றவருக்காகத் தன்னை அர்ப்பணிப்பது முக்கியமாகும் உணர்வை முன் கொண்ட தொடர்பு இல்லாது,நல்ல உயர்வான பிரதிச் செயலை மற்றவர் காட்டும் போதும், விருப்பமில்லாத கோப வெறுப்பு உணர்வை மற்றவர் காட்டும் போதும், மாறாத அர்ப்பணித்த அன்புத்தொடர்புடன் வாழ வேண்டும். அதாவது மற்றவரின் நன்மையைத் தனது நன்மையாகக் கருதி இருவரும் செயற்பட வேண்டும்.

சட்டப்படி தொடர்பு ஏற்பட்டு விட்டதே என்பதற்காக இருவரும் வாழும் வாழ்க்கை விவாக வாழ்க்கையல்ல. இருவருக்குமிடையிலும் ஆழமான அன்புத் தொடர்பு முக்கியமானதாகும். எவ்வளவுதான் பிரச்சினை வந்தாலும் இருவரும் கலங்கி அதைரியப்படாது, அவர் எங்கு சென்றாலும் நானும் அவருடன் சென்று வாழப்போகிறேன் என்ற மனநிலை இருவருக்கும் தேவை.

கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் இருக்கும் தொடர்பு நன்றாக இருந்தால், பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான தொடர்பும் நன்றாக இருக்கும். இல்லையேல் ஒருவர் ஒருவருக்கிடையில் உறவு உடைந்து விடும். கணவனும், மனைவியும் காலையும், மாலையும்- எந்நேரமும் கீரியும் பாம்பும் போல் சண்டை பிடித்த வண்ணம் இருந்தால் இதைப் பிள்ளைகள் பார்த்து அவர்களும் அவ்வாறு பழகிவிடுவர்.

இன்று எமது சமுதாயத்தில் தனிக் குடும்பமே பெருகி வருகிறது. திருமணத்திற்கு முன் ஒருவர் ஒருவரைத் தெரிவு செய்த பின் பெற்றோருக்கு அறிவிப்பர். பெற்றோரைக் கேட்டுத் தீர்மானம் எடுப்பது குறைந்து வருகிறது.

முன்பு சமுதாயத்தால் ஆணுக்கும், பெண்ணுக்கும் பொறுப்புக்கள் கொடுக்கப்பட்டிருந்தன. பொருளாதாரத்தைத் தேடுவது ஆண், சமைப்பது, பிள்ளைகளை வளர்ப்பது பெண் என்ற நிலை இருந்தது. திருமணத்திற்கு முன் ஒரு பெண் நன்றாகச் சமைக்கப் பழகியிருப்பது தான் முன் ஆயத்தம் என்று எண்ணினர். ஆண் பொருளாதாரத்தைத் தேட ஒரு தொழில் தேடுவதே முன் ஆயத்தம் என எண்ணினர்.

இன்று அப்படியல்ல, இருவரும் வேலைக்குப் போகின்றனர், இருவரும் பிள்ளைகளைப் பார்க்கின்றனர். இருவரும் சமைக்கின்றனர். முன்னைய காலங்களை விட இக்காலத்தில் திருமணத்திற்கு முன் விஷேடமான ஆயத்தங்கள் தேவைப்படுகின்றன. முன்பு கூட்டுக்குடும்பங்கள் இருந்ததால் இருவருக்குமிடையில் பிரச்சினைகள் ஏற்படும்போது அதைக் தீர்த்து வைக்கப் பெரியவர்கள் குடும்பத்தில் இருந்தனர். இன்று தனிக்குடும்பங்கள் பெருகி வருவதால் தமது பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது திண்டாடுகின்றனர்.

திருமணத்திற்கு முன் மணப்பெண்ணின் பெற்றோர் "உனது கணவனைத் திருத்த நீ தெரிந்து வைத்திருக்க வேண்டும்" என்பர். அவ்வாறே மணமகனுக்கு அவனது பெற்றோர் "உனது மனைவியைத் திருத்த நீ தெரிந்து வைத் திருக்க வேண்டும்" என்பர். கணவனும், மனைவியும் திருமணத்திற்குப் பின் ஒருவரை ஒருவர் திருத்துவதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பர். இதனால் சண்டை அதிகரிக்குமே தவிர, குறையாது. எமது திருமண வாழ்வு வெற்றிகரமானதாக அமைய வேண்டுமானால் கீழ்வரும் விடயங்களை மனதில் கொள்வது நல்லது.

(அ) மணமகனுக்கும், மணமகளுக்கும் மன உறுதி தேவைப்படுகிறது. அதாவது எமது திருமண வாழ்வு, குடும்ப வாழ்வு நல்லதாகவே அமையும் என்ற விசுவாசம் நம்பிக்கை தேவை. திருமண வாழ்வைத் தொடங்கும் போதே சந்தேகம் பயம் இருந்தால், எப்படி வெற்றிகரமான திருமண வாழ்வு அமையும்?

(ஆ) திருமண வாழ்வு சிறப்புற, இருவருக்கும் மன முதிர்ச்சி தேவை. மற்றவருடன் பழகும்போது நல்ல உறவை ஏற்படுத்தக்கூடிய நடமாட்டத்தைக் கொண்டிருத்தல் வேணடும். அதாவது மற்றவருடன் நல்ல தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருத்தல் வேண்டும். அதாவது மற்றவருடன் நல்ல தொடர்பை ஏற்படுத்துவதில், பழகுவதில் வளர்ச்சியடைந்தவரை மனமுதிர்ச்சி பெற்றவர் எனலாம்.

(இ) திருமணத்திற்கு முன் மிகவும் சிறந்த ஆயத்தம் என்னவென்றால்- நல்ல குடும்பத்தில் வாழ்ந்திருப்பதே. நான் வாழ்ந்த குடும்பத்தில் எப்படி வாழ்ந்தேனோ, அப்படியே வாழப் போகும் குடும்பத்தில் வாழவேன் என்பதை மறந்து விடாதீர்கள். தன்னைத் திருத்தி வாழ முனைந்தால் குடும்ப வாழ்வு சிறப்படையும்.

(ஈ) திருமணத்திற்கு முன் ஆயத்தம் என்பதில் இரண்டு உள்ளது. ஒன்று நீண்டகால ஆயத்தம் அதாவது சிறு வயதிலிருந்து மற்றவர்களால் ஏற்றுக் கொள்ளப்படுவது, ஒழுங்கைப் பழகுவது, பாதுகாப்பைப் பெறுவது, சுதந்திரத்தை அனுபவிப்பது, அன்பைப் பெறுவது போன்றவையாகும். மற்றையது பணம், உடை, இருக்க இடம், தொழில் போன்ற ஆயத்தங்களாகும்

எமது ஆயத்தங்கள் இருவருடைய உறவையும், தொடர்பையும் ஆழமாக்க உகந்தனவாக இருக்க வேண்டும். வெறும் ஆடம்பரம், அந்தஸ்து போன்றவற்றுக்கு அடிமையாகியவைகளாக இருக்காது, வருவாய்க்குத்தக்க செலவுடன் அவசியமானதை மட்டும் பாவித்து மகிழ்ச்சிகரமாக வாழ உதவ வேண்டும். போட்டி மனப்பான்மையிலிருந்து விடுபட்டு இயற்கையாக வாழப்பழக வேண்டும். ஆகவே திருமண வாழ்வு மலர வேண்டுமானால் நல்ல தொடர்புள்ள வாழ்வு அவசியம்.

**எஸ்.ஜே.யோகராஜா**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*உயர்வும், தாழ்வும் அவரவர் எண்ணங்களால் வெளிப்படுத்தப்படும்.*

- ஸ்ரீவன்லோ.

# நமது நோக்கு

## அரசியல் தலையீட்டின் அநாவசியம்!

முப்படைகளின் பிரதம தளகர்த்தர் என்ற அதிகாரத்துடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க- அடிக்கடி விடுக்கும் அச்சுறுத்தலைத் தவிர்க்கு முகமாக - ரணில் அரசாங்கம் ஒரு தீர்க்கமான நகர்வுக்கு வரவேண்டிய கட்டம் தோன்றியுள்ளது.

இதற்கமையவே, பாதுகாப்பு அமைச்சு மீதும், ஆயுதப் படைகள் மீதும் - ஜனாதிபதி கொண்டுள்ள அதிகாரங்களைக் குறைக்கும் வண்ணம், புதிய சட்டமூலம் ஒன்றை நிறைவேற்றும் செயற்பாடுகளில் ஐக்கிய தேசியக் கட்சி தீவிரமாக இறங்கியுள்ளது.

இந்த அதிகாரங்கள் - முப்படைத்தளபதிகளும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் இடம்பெறவுள்ள - பாதுகாப்பு மீளமைப்புக் குழுவிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

இதன் மூலம் - படைத்துறையில் ஜனாதிபதியின் நேரடித் தலையீடு ஓரளவேனும் தவிர்க்கப்படும் எனவும், இனிவரவுள்ள சமாதானத்தை உறுதிப்படுத்தும் முக்கிய முயற்சிகளில் ஒன்றாகிய, உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்குவதற்கான - ஜனாதிபதியின் முட்டுக்கட்டைகள் பலவீனப்படுத்தப்படலாம் என ஐக்கிய தேசிய கட்சியினர் எதிர்பார்ப்பதாகவும் தெரியவருகின்றது.

சிறிலங்காவின் ஆயுதப்படைகளின் மீதான அரசியல் ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் - குறைத்துக் கொள்வதற்கு / தளர்த்திக் கொள்வதற்கு, இத்தகைய முயற்சிகளின் அவசியம் - பலராலும் சுட்டிக்காட்டப்பட்ட ஒன்றே.

தமிழர்களுக்கு எதிராக - ஆயுதப் படைகள் தமது யுத்தத்தைத் தொடங்கிய முதலே, படைகள் வெறுமனே ஆயுதம் தரித்த நிலையினின்றும் விலகி - அரசியல் மயப்படுத்தப்பட்ட இராணுவமாகவே மாறிவிட்டதையும்,

அரசியல் இலக்குகளுக்குத் துணை போவதற்காக - இராணுவம் முழு அளவில் யுத்தக் களத்தில் இறக்கப்பட்டதும் அண்மைய வரலாறுகளில் நாம் கண்டிருக்கின்றோம்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான இராணுவ நடவடிக்கைகளும், 'ஜயசிக்குறு' நடவடிக்கை மூலம் யாழ்ப்பாணத்திற்கான தரைவழிப்பாதை திறப்பதற்கான முயற்சியும் - அவை கொண்டிருந்த இராணுவ பரிமாணங்களுக்கும் மேலாக - அரசியல் வெற்றிகளையும், ஆதாயங்களையும் குறியாக வைத்தே மேற்கொள்ளப்பட்டன என்பது இதற்கு ஓர் தகுந்த உதாரணமாகும்.

இந்தவகையில் - போரின் தீவிரம் என்பதும் அரசியல் சார்ந்ததாக மாறிவிட்ட நிலையில்- அமைதிக்கான முயற்சிகளிலும், இராணுவத்தைப் பகடைக் காயாக்க முனைவதைத் தடுக்க வேண்டிய கடப்பாடு, சமாதானத்தை நேசிக்கும் அனைவரிடமும் இருக்க வேண்டியது அவசியமாகும்.

சமாதானச் சூழலுக்கான நடவடிக்கைகள் வேகம் கொள்ளும் இன்றைய நிலையில் - ஆயுதப் படைகளைப் பயன்படுத்தி, அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் முகமாக அவர்களைத் தூண்டுவதென்பது - அப்பட்டமான சுயநலச்செயலாக இருக்குமேயன்றி வேறல்ல.

ஏற்கனவே - அங்கொன்றும், இங்கொன்றுமாக நடந்த சில மீறல்களை ஊக்குவிப்பதாக அமையும் கருத்துக்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், அவரது கட்சியினரும் பொதுமேடைகளில் வெளியிட்டுள்ளனர்.

எனவே - சுமுகமான வகையில் சமாதானம் முன்னெடுப்பதற்கு ஏற்றதாக - வீண் குழப்பங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டியதன் தேவையை உணர்த்துமாப்போலவே - ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் முயற்சி இருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

# கொழும்புத்துறையில் ஆலயப் பூசகர் வீட்டில் படையினரால் பௌத்த விகாரை அமைப்பு

## தடுத்து நிறுத்துமாறு அமைச்சர் மகேஸ்வரனுக்கு மகஜர்

(கொழும்புத்துறை)

ஆலயக் குருக்கள் வீட்டுவளவினுள் பௌத்த விகாரை அமைக்கும் பணியை நிறுத்துமாறு கோரி - இந்துசமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரனுக்கு கொழும்புத்துறை மேற்கு, வதிவிட இந்து இளைஞர் மன்றத்தினரால் மகஜர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்திற்கு சொந்தமான, ஆலய அர்ச்சகர் தங்கும் வீட்டு வளவினுள் அப்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினரால் - பௌத்த விகாரை அமைக்கும் பணியை உடன் நிறுத்தும்படியும், அப்பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரை நகர்த்தி வீதித் தடைகளை அகற்றும்படியும் அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கைகள் சாத்தியமாகாத பட்சத்தில் மக்கள் ஒன்றிணைந்து போராட்டத்தில் ஈடுபடும் சூழ்நிலை உருவாகலாம் எனவும் அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரித்தானியப் படை அதிகாரி நவம்பர் நடுப்பகுதியிலேயே வருவார்!

(கொழும்பு நிருபர்)

ஐ.நா. அமைதிப்படையில் சிறிலங்காப் படையினரை இணைப்பது தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்காக கொழும்பு வரவிருந்த பிரித்தானிய முன்னாள் இராணுவ அதிகாரியின் இலங்கை விஜயம் பிற்போடப்பட்டிருக்கின்றது.

பிரித்தானியாவின் ஓய்வுபெற்ற இராணுவ ஜெனரல் ஒருவரிடம், சிறிலங்காப் படையினரை ஐ.நா. சமாதானப் பணிக்கு அனுப்புவது குறித்து விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரியிருந்தார்.

இந்த அறிக்கையுடன் பிரித்தானிய முன்னாள் இராணுவ அதிகாரி வியாழனன்று கொழும்பு வருவதாக இருந்தது. எனினும் இவ்வதிகாரி நவம்பர்மாத நடுப்பகுதிக்குப் பின்னரே கொழும்பு வருவார் எனத் தெரியவருகின்றது.

## முக்கிய படையதிகாரிகள் நாளை முதல் இடமாற்றம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தின் உயர்மட்ட அதிகாரிகள் மத்தியில் சில மாற்றங்களைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. நாளை புதன்கிழமை முதல் இராணுவ கட்டளைப்பீடத்தில் இந்த மாற்றங்கள் செய்யப்படவுள்ளன.

இராணுவ தொண்டர் படைகளின் தளபதியாக மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட நியமிக்கப்பட்டுள்ளார். தொண்டர் படைகளின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா பிரதி இராணுவத் தலைமை அதிகாரியாகப் பொறுப்பேற்கவுள்ளார்.

இதேவேளை - வன்னியிலுள்ள படைகளின் தளபதியாக மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால நியமிக்கப்படவுள்ளார். இதுவரை இப்பதவியிலிருந்த மேஜர் ஜெனரல் சூல செனவிரத்ன - அதிகாரிகள் பணியக இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை 52ஆவது டிவிசன் படையணியில் பொதுக் கட்டளை அதிகாரியாக இருந்த பிரிகேடியர் நிசங்க விஜேசிங்க இராணுவத் தலைமையகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். 52ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாக ஜி.ஏ.சந்திரசிறி பொறுப்பேற்கவுள்ளார்.

# பிரமுக வங்கி மீதான நடவடிக்கை திட்டமிட்ட அரசியல் பழிவாங்கல்

## வங்கியின் தலைவர் கூறுகிறார்

(கொழும்பு நிருபர்)

இலங்கை மத்திய வங்கியால் தடை செய்யப்பட்டுள்ள பிரமுக வங்கியின் தலைவர் மற்றும் இயக்குநர் சபை உறுப்பினர்களைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

முறையற்ற நிதி நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் பிரமுக வங்கியின் செயற்பாடுகள் முற்றாக முடக்கி வைக்கப்பட்டுள்ளன. இந்த வங்கியின் தலைவர் றொஹான் பெரேரா மற்றும் இயக்குநர் சபை உறுப்பினர்கள் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மத்திய வங்கியின் இந்தச் செயற்பாடு திட்டமிடப்பட்டதொரு அரசியல் பழிவாங்கல் என்று பிரமுக வங்கியின் தலைவர் றொஹான் தெரிவித்திருக்கின்றார். இந்த முறையற்ற நடவடிக்கையை எதிர்த்து நீதிமன்றத்துக்குச் செல்லப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பிரமுக வங்கியின் தலைவர் றொஹான் பெரேரா, ஜனாதிபதி சந்திரிகாவின் ஆதரவாளர் என்றும் -

இதன் காரணமாகவே அரசியல் ரீதியாக இவர் பழிவாங்கப்பட்டிருக்கிறார் என்றும் கூறப்படுகின்றது.

## தேர்தலுக்குத் தயாராகும் தேர்தல் திணைக்களம்

உடனடியாகத் தேர்தல் நடாத்துவதற்குத் தேர்தல் திணைக்களம் தயாராகி வருகின்றது.

தேர்தல் திணைக்களத்துக்கு இதுவரை தேர்தல்களை நடத்துவதற்குரிய நடவடிக்கைகளுக்காக 1 கோடி 56 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது. வாக்குச் சீட்டுகள் அச்சிடுவதற்குரிய கடதாசி வகைகள் இறக்குமதி செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# அத்துருகிரிய ஆயுதக் களஞ்சிய வழக்கு கண்டி நீதிமன்றத்தில் விசாரணை

(கொழும்பு நிருபர்)

அத்துருகிரிய, மிலேனியம் சிற்றியில் ஆயுதக் கிடங்கு கண்டுபிடிக்கப்பட்ட விவகாரம் தொடர்பான வழக்கு நவம்பர் 12ஆம் திகதி கண்டி மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது.

உரிய முன் பாதுகாப்பு அனுமதி இன்றி ஆயுதங்களை மறைத்து வைத்திருந்ததாக பிரதி பொலிஸ் மா அதிபர் உடுகம்பொலவால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணையின்போது ஆஜராகுமாறு இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல, இராணுவப் புலனாய்வுத்துறையின் இயக்குநர் பிரிகேடியர் கபிலகெந்த விதாரண, கப்டன் தர அதிகாரி ஒருவர் மற்றும் 6 படையினருக்கு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

அத்துருகிரிய, மிலேனியம் சிற்றியில் கண்டுபிடிக்கப்பட்ட அபாயகரமான ஆயுதங்கள் தொடர்பாகவே இந்த வழக்குத் தொடரப்பட்டது. இந்த ஆயுதக் களஞ்சியத்திலிருந்து சர்வதேச ரீதியில் தடை செய்யப்பட்ட இரசாயன ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

இராணுவப் புலனாய்வுத்துறையின் ஏற்பாட்டில், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கடந்த காலப் பகுதியில் கொமாண்டோத் தாக்குதல்களை நடத்தி வந்த, ஆழ ஊடுருவித் தாக்கும் படைப்பிரிவே இந்த ஆயுதக்களஞ்சியத்தை பேணிவந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(01)

# அபிவிருத்தி நடவடிக்கைகளில் சமூக அபிவிருத்திக்கே முதலிடம்

## பின்தங்கிய நிலையை மேம்படுத்தத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

எதிர்காலத்தில் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்திப் பணிகளின்போது சமூக அபிவிருத்திக்கே முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை யாழ்.செயலகம் மேற்கொண்டு வருகிறது. கடந்த காலத்தில் பௌதீக ரீதியான அபிவிருத்திக்கே முன்னுரிமை வழங்கப்பட்டு வந்தது. இதனால் சமூக அபிவிருத்தி மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்டது. இவ்வாறான நிலையைத் தவிர்த்து சமூக அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காகவே இம் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

எதிர்காலத்தில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கூடாக மேற்கொள்ளப்படவிருக்கும் செயற்திட்டங்கள் அனைத்திலும் சமூக அபிவிருத்தி சார்ந்த விடயங்களையும் இணைத்துக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதன்படி சமூக அபிவிருத்திப் பணிகளுக்கு உதவும் வகையான பொதுக்கட்டடங்கள் அமைத்தல், பொது மக்களுக்கான கருத்தரங்குகள், பயிற்சித் திட்டங்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்தல் போன்ற விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

(க)

# செல்வம் சேர்த்த சியோனிஸம் முதல் தேசிய எல்லை கடந்த கம்பனிகள் வரை!

## சுயநிர்ணயம் - ஒரு பார்வை (பகுதி-5)

**வேலும்மயிலும் சேந்தன்**



கனேடிய, ஜப்பான் பிரதமர்கள்.

இன்றுள்ள ஏக துருவப்பட்ட - அமெரிக்கா தலைமையிலான சர்வதேச அரசியல் அரங்கில் - அதாவது இன்றைய உலக மயமாதலின் பின்புலத்தில் - முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி வூட்ரோ வில்சனது சுயநிர்ணயம் பல பரிமாணங்களை வேண்டி நிறகின்றது என்பதுடன் சென்றவாரம் இக்கட்டுரைத் தொடர் நிறைவடைந்திருந்தது.

இவ்வாரம் உலகமயமாதலின் இசைவாக்கத்திற்கு, சந்தை விஸ்தரிப்புக்கு எவ்வாறு சுயநிர்ணயம்- இன்றைய உலகின் பல கலாசாரத் தன்மையை, பல இனத்துவத் தன்மையை - "ஒருங்கிணைக்கும் சாதனமாக" இருக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானது என்பது பற்றி இன்று நோக்குவோம்.

இன்று உலகமயமாதல் பற்றிய செய்திகள் செய்தித்தாள்களிலும் இலத்திரனியல் ஊடகங்களிலும் பரவலாக வெளிவந்த வண்ணம் இருக்கின்ற இவ்வேளையில் -

இன்றைய உலக மயமாதலின் அடிப்படை என்ன? அது எப்போது சிந்தனை வடிவம் பெற்றது? அதன் செயல் வடிவம் எக்கால கட்டத்தில் முன்வைக்கப்பட்டது? அச்செயல் வடிவத்தின் முதிர்ச்சிக்காலம் எத்தகையது? அதன் புறவயத்தன்மையான சர்வதேச அரசியல் அரங்கில் அதன் பங்கு என்ன? என்பவை பற்றி நாம் சிநதிப்போம்.

இன்றைய உலகமயமாதலின் சிந்தனை வடிவம் - பணத்திற்கும், மூலதனத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் யூத மக்களின் மதமாகிய சியோனிஸத்திலிருந்தே (Zionism) தோற்றம் பெற்றது.

யூத மக்களின் சியோனிஸம் - மனித ஒழுக்கம், மற்றும் ஒழுக்காற்றுக்கான தத்துவங்களுக்குப் புறம்பாக, மூலதனத்திரட்சிக்கான தேவைபாடுகளையும் அதன் நியாயத்தன்மைகளையும் தனது தத்துவங்களாகக் கொண்ட ஒரு சமுதாயத்தை உருவாக்கியது.

ஏனெனில் - அம்மதம் அத்தகைய புவியியல் காலநிலைப் பிரதேசத்திலேயே நிலைபெற்றிருந்தது. யூத மக்கள் வாழ்ந்த மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய கண்டங்களில் வருடத்தின் எல்லாக் காலநிலைப் பகுதியிலும் தமக்குத் தேவையான விவசாயத்தைச் செய்யக்கூடியதாக இருக்கவில்லை. மாறாக - பருவகாலங்களுக்கு ஏற்பவே பயிர்ச்செய்கையிலும் மந்தை வளர்ப்பிலும் அவர்கள் ஈடுபட்டனர். மந்தை வளர்ப்பு வருடம் பூராகவும் மேற்கொள்ளக்கூடிய சூழ்நிலையைக் கொண்டிருந்தாலும் - பயிர்ச்செய்கை அவ்வாறான புறச்சூழலை கொண்டிருக்கவில்லை. பருவகாலத்தின் மட்டுப்படுத்தல்களை யூத மக்கள் முகங்கொடுக்க வேண்டிய தேவையினால் அவர்கள் வணிகத்திற்கு (Trade) அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதாயிற்று.

வணிக செயற்பாடுகள்மூலம் தங்களை நிலைநிறுத்தக் கூடிய சமூகமாக (Sustainable Society) யூதர்கள் தகவமைத்துக் கொண்டனர். இந்த வகையில் அவர்களுக்கு, வணிகத்தில் ஈடுபட மூலதனம் தேவைப்பட்டது.

ஒருவகையில் இதனை நாம் நோக்கும்போது (கீழைத்தேச சிந்தனையில் இருந்து) யூத மக்களின் சியோனிஸம் தவறானதாக நாம் எடைபோடக்கூடாது. ஏனெனில் - ஒரு மக்கள் கூட்டத்தால் உருவாக்கப்பட்ட தத்துவமானது அந்த மக்களை வழிப்படுத்தவும், நெறிப்படுத்தவும், அவர்களை நின்று நிலைபெறச் செய்யவேண்டியதுமான கடமைப்பாட்டினை கொண்டிருக்கின்றது என்று வாதிட்டால் அது மிகச்சரியானதே ஆகும்.

இந்தவகையில் - யூத மக்களே வட்டிக்குப் பணத்தினைக் கடனாக கொடுக்கும் பழக்கத்தினை கொண்டிருந்தார்கள். அவர்களே இன்று பல்கிப் பெருகி வியாபித்திருக்கும் வங்கிகளின் முன்னோடிகளாகவும் விளங்குகின்றனர்.



ஜீ.- 8 நாடுகளின் தலைவர்களுடன் ஐரோப்பிய ஒன்றியத் தலைவரும், ஐரோப்பியச் சபைத் தலைவரும் காணப்படுகின்றனர்.

இதேநேரம் -ஐரோப்பாவின் இன்னொரு பகுதியின்- மூலதனத் திரட்சிக்கான ஆரம்பம், அரச நிறுவனமாக நிறுவனமயப்படுத்தப்பட்டது. அதாவது மூலதனத் திரடசிக்கான செயல்வடிவம் முதன் முதலில் ரோமப் பேரரசு காலத்தில்தான் ஆரம்பம் என்பது வரலாற்று ஆய்வாளர்களின் முடிவாகும். ***ரோம, கிரேக்க பேரரசுகளின் காலங்களில்- மூலதனம் அப்பேரரசுகளின் ஆதிக்க விஸ்தரிப்புக்கான செயற்பாட்டுக் கருவியாக அமையவில்லை.*** மாறாக- யுத்தங்கள் மூலம் வெற்றிபெற்ற பேரரசு, வெல்லப்பட்ட பிரதேசங்களினது மூலதனத்தைத் தம்மிடம் திரட்டிக் கொள்ளவே முழு முனைப்பாக இருந்ததாக அறியமுடிகின்றது.

இந்தவகையில், ஐரோப்பாக் கணடத்திலே உருவான மூலதனத் திரட்சிக்கான சிந்தனை- "மக்னா காட்டா" உடன்படிக்கை, பிரான்சியப் புரட்சி, கைத்தொழிற் புரட்சி என்பவற்றினூடாகவும் அந்த தொடர்ச்சியின் இறுதியான வடிவமாக தாராளமயவாதச் சிந்தனையும் அதற்கு சமாந்தரமான சந்தை அடிப்படைவாதமும் நின்று நிலைபெற ஏதுவாயிற்று. (இக்கால கட்டத்தை விபரிப்பதற்கு இக்கட்டுரையின் விடயப்பரப்பு போதுமான கால அவகாசத்தைக் கொண்டிருக்காதபடியால்-காலத் தொடர்ச்சியைத் தொட்டுச் செல்கிறேன். வாசகர்கள் மன்னிப்பார்களாக.)

இந்த காலத் தொடர்ச்சியின் அடிபபடையிலே 19ஆம் நூற்றாண்டுக்கு நாம் வருவோமேயானால்-ரோமப் பேரரசுக் காலத்தில் உருவாகிய ஒரு அரசியற் கோட்பாடாக "விருப்புக்களின் கட்டமைப்பு" (Interest block) என்னும் அரசியற் கோட்பாடு காணப்பட்டது. அதாவது - ரோமப் பேரரசு யுத்தங்களால் மட்டுமே பேரரசை உருவாக்கவில்லை. மாறாக மக்களின் தேவைகள், மற்றும் விருப்புக்களின் அடிப்படையில் அப்பகுதி மக்களையும் அவர்களது ஆள்புலப் பிரதேசத்தையும் இணைத்துவிடும் வகையில், ஓர் அரசியல் இராஜதந்திரத்தை ரோமாபுரியின் இராஜதந்திரிகளும் கொள்கை வகுப்பாளர்களும் கொண்டிருந்தனர். அந்த வகையில் ரோம சாம்ராச்சியத்தை யுத்தங்களின் தாக்கங்களுக்கு அப்பால், மிக வளமுடையதாகக் கட்டியெழுப்பவும் திட்டமிடப்பட்டது. இந்த வகையில் - முதலாவது மிகப்பெரிய செல்வந்தப் பேரரசாக வரலாற்றில் - ரோமப் பேரரசே விளங்கியது.

இதே கோட்பாட்டை ஜேர்மனியின் வலிமை வாய்ந்த அரசுத் தலைவரும், அரசியல் தத்துவாசிரியருமாக இருந்தவருமான பிஸ்மார்க் (Bismark) இன் 'நலன்புரி அரசு' கோட்பாட்டுடன் (Welfare state) இணைந்து - 1896 இல் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக நின்ற ***மார்க் ஹன்னா*** (Mark Hanna), ஐக்கிய அமெரிக்க மாநிலங்களுக்கிடையே இருந்த வடக்கு-தெற்கு வேறுபாட்டை நீக்கவல்ல அரசியற் கோட்பாடாக, தனது ஜனாதிபதித் தேர்தல் காலங்களில் அதனை முன்வைத்தார்.

பின்பு அவர் தேர்தலில் தோல்வியடைந்தமையால், அக்கோட்பாடு அமெரிக்க மாநிலங்களுக்கிடையிலேனும் செயல் வடிவம் பெறத் தவறிவிட்டது. ஆனால் - அதன் பின்னர் அமெரிக்க ஜனாதிபதியாக வந்த- ***பிராங்கிளின் ரூஸ்வெல்ற*** இதே தத்துவத்தை அமெரிக்கா மாநிலங்களுக்கிடையிலான ஒருமைப்பாட்டினைப் பாதுகாப்பதற்கு பயன்படுத்தினார்.

அத்துடன் மூலதனத்தின் உதவியுடன் - மக்களின் தேவைகள், விருப்புக்கள் என்பவற்றின் அடிப்படையில், மக்களின் ஆள்புலப் பிரதேசத்தை (மாநிலங்களை) ஒருங்கிணைக்கும் செயற்பாட்டை மிகவும் இலாவகமாக அவர் மேற்கொண்டார்.

இந்தவகையில் - அமெரிக்காவின் விவசாயிகள், வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் என அனைவரும் பொதுவான பொருளாதார அபிவிருத்தி நோக்கில் ஒன்றிணைக்கப்பட்டனர்.

ஆனால் - இத்தத்துவச் செயற்பாடானது- ஐக்கிய அமெரிக்காவிற்குள் மட்டுமே நடைமுறைப்படுத்தப்படலாம்- ஆனால் சர்வதேச அரங்கிற்கு செயற்படுத்தமுடியாது என அந்தக் காலகட்டங்களில், அமெரிக்க அரசியலாய்வாளர்கள் நம்பியிருந்தனர். அவர்கள் அவ்வாறு நம்பியிருந்ததற்கான காரணம் - அக்கால கட்டத்தில் ஐரோப்பாவில் தீவிரம் பெற்றிருந்த தேசியவாதச் சிந்தனை (Nationalism) என்றால் அது மிகையில்லை என்றே கூறலாம்.

ஆனால் - 1970களின் மத்தியில் ***அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன்,*** 'ஒபெக்' (OPEC) நிறுவனத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம்- 'ஒபெக்' நிறுவனம் அமெரிக்க நிறுவனங்களுக்கு எரிபொருள்களை வர்ரி வழங்குமாறு பாரிய நிதியுதவியினை அதற்குச் செய்து கொண்டதன் மூலம் - சர்வதேச அரங்கிற்கும் மார்க் ஹன்னா (Mark Hanna)வினது அரசியற் சிநதனை செயல் வடிவம் பெறத் தொடங்கியது எனலாம்.

அமெரிக்க உற்பத்தி நிறுவனங்களுக்கு 'ஒபெக்'கிடமிருந்து பெறப்பட்டு, எவ்வித கட்டுப்பாடுமில்லாது வழங்கப்பட்ட எரிபொருட் சக்தியானது - பல்வேறு தேசங்களினதும் அத்தேசங்களினது மக்களது விருப்புக்களையும், தேவைகளையும் வழங்கக்கூடிய தகுதிப்பாட்டையும் வளத்தையும் அமெரிக்க நிறுவனங்களுக்கு வழங்கியது.

இதன் அடிப்படையிலேயே- உலகின் பல்வேறு தேசங்களையும் இணைத்து பல்தேசிய கம்பனிகள் (Multi National Companies) உருவாகின.

இப் பல்தேசிய கம்பனிகளானது தமது வியாபாரச் செயற்பாட்டின் மூலம், ஊதிப்பெருத்து ஒரு நாட்டின் தேசிய மூலதனத்தைவிட, பாரிய மூலதனத்தைக் கொண்டிருக்கும் கம்பனிகளாக தம்மைத் தகவமைத்துக் கொண்டன. காலவோட்டத்தில் குடியேற்றவாதத்தில் இருந்து-புதிதாக விடுதலைபெற்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின், தேசிய மூலதனத்தையும் விட, பல மடங்கு பெரிதான பாரிய மூலதனத்தைக் கொண்ட பல் தேசியக் கம்பனிகள் உருவாகின.

அவை தங்களின் மேந்தலைச் செலவுகளை (Over head cost)- அதாவது, உற்பத்தி சாராத நிர்வாக மற்றும் பராமரிப்புச் செலவுகளைச் சிக்கனப்படுத்த ***தேசிய எல்லைகளைக் கடந்த கம்பனிகளாக*** (Trans national Companies) தம்மை 1990 களில் தகவமைத்துக்கொண்டன.

தேசிய எல்லைகளைக் கடந்த கம்பனிகளானது- அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் இறையாண்மையையும் அரசியற் ஸ்திரத்தன்மையையும் பாதிக்கும் வகையில், உச்ச இலாபத்தை தக்கவைபபதற்காகவே - தேவைப்படும் போதெல்லாம் பொருளாதார மற்றும் நிதி உதவியென்னும் பெயரில் தலையிட்டு வரவும் ஆரம்பித்தன. இதுவே விளிம்பு நிலை நாடுகள் - சர்வதேச அரசியலில் - இன்று எதிர்நோக்கும் பாரிய பிரச்சினையாகவும், நெருக்கடியாகவும் உருவாகியுள்ளது.

இது ஒருபுறமிருக்க - சோவியக் கட்டமைப்பின் வீழ்ச்சியுடன் இணைந்த ரஷ்யாவினது 'பெரஸ்ரொய்க்கா' திட்டத்திற்கு சமாந்தரமாக தேசிய எல்லைகளைக் கடந்த கம்பனிகள் பலம்பெற்றகதையும் 1990 களின் ஆரம்பத்தில் நடந்தது.

இந்த வகையில் - தேசிய எல்லைகளைக் கடந்த கம்பனிகளால் நிர்வகிகக்கப்படும் பாரிய பொருளாதாரக் கட்டமைப்பு ஒன்று உருவானது.

அது தேசிய எல்லைகள் கடந்த பொருளாதாரம் - (Trans national Economy) என்று வரையறுக்கப்படுகின்றது.

இத்தேசிய எல்லைகளைக் கடந்த பொருளாதாரமானது - குறித்த தேசிய எல்லைகள் கடந்த கம்பனியினது உச்ச இலாபத்தினை நோக்காகக் கொண்டு, எங்கெங்கு மூலவளங்கள் மலிவாக கிடைக்கின்றனவோ, அங்கெல்லாம் குறித்த மூலவளங்களைத் தனது உற்பத்திக்குப் பயன்படுத்தி (அம்மூலவளங்களாக மனிதவளங்களும் இருக்கலாம், மாறாக உற்பத்திக்கான மூலப்பொருட்களாகவும் இருக்கலாம்) பாரிய உற்பத்தியில் ஈடுபடும்போது, அவ்வுற்பத்தியானது - குறித்த தேசததிற்குரியதாக இருக்காது. மாறாக, குறித்த தேசிய எல்லைகள் கடந்த கம்பனிக்கானதாகவே இருக்கும்.

அக்குறித்த பொருட்களின் உடமையாதிக்கத்தைப் பேணுவதற்காகவே 'உங்டாட்' (UNCTAD) உடன்படிக்கையும் அத்துடன் இணைந்த நிறுவனமான உலக வர்த்தக அமைப்பும் (WTO) செயற்படுவதனை நாம் அவதானிக்கலாம்.

இவ்வாறான தேசிய எல்லைகளைக் கடந்த கம்பனிகள் - உலகில் ஜீ-8 நாடுகளென (G-8 Countries) வரையறுக்கப்படும் அமெரிக்கா, ரஷ்யா, ஜேர்மனி, பிரிட்டன், இத்தாலி, கனடா, பிரான்ஸ், ஜப்பான் ஆகிய நாடுகளில் காணப்படுகின்றன. இவையே, இந்த தேசிய எல்லைகளைக் கடந்த பொருளாதாரத்தை (Trans national Economy)ஐ நிர்ணயிப்பவையாகக் காணப்படுகின்றன.

இவ்வாறு பாரிய உற்பத்திப் பெருக்கமானது - உலகின் எல்லாப் பாகங்களிலும் சென்றடைவதும், அவற்றின் மூலம் பெறப்படும் வருமானம் மீண்டும் தேசிய எல்லைகள் கடந்த கம்பனிகளைச் சென்றடைவதற்காகவும் உருவாக்கப்பட்ட தத்துவார்த்தப் பின்னணியே "உலகமயமாதல்" (Globalization) ஆகும்.

இவ்வுலகமயமாதல் - இன்று உலகிலுள்ள பல தேசியங்களைக் கடந்து, பல இனங்களைக் கடந்து, பல கலாசாரங்களைக் கடந்து - மேற்படி கம்பனிகளது உற்பத்திப் பண்டங்களை விற்பனை செய்வதற்காக - பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டு ஊடு ருவி வருகின்றது.



ஜீ-8 நாடுகளின் மாநாட்டுக்குப் பின் அதன் தலைவர்கள்

எந்தவொரு நாட்டிலும் உள்ள இனங்களுக்கிடையே-முறுகல் நிலை, அல்லது முரண்நிலை தோனறுமிடத்து அவற்றைத் தணிக்கவும், அதன் மூலமான - எவ்வித இடையூறுகள் இல்லாத சூழலில் - தேசிய எல்லைகள் கடந்த கம்பனிகளின் உற்பத்திகளை விற்பனை செய்யவும் பெருமுயற்சி எடுக்கப்படுகின்றது என்றால், அதற்கு ஏராளம் சான்றுகளுள்ளன.

இந்த பெருமுயற்சியில் ஒன்றான -'ஒடுக்கப்படும் மக்களுக் கான சுயநிர்ணயம்'-தேசிய - எல்லைகள் கடந்த கம்பனிகளால் எவ்விதம் சுய ஆதாய நோக்கோடு கையாளப்பட்டது/கையாளப்பட்டு வருகின்றது என்பதை அடுத்த வாரம் பார்ப்போம்.

(பிரதி செவ்வாய் தொடரும்)

## விடிவுவரும் என எதிர்பார்த்து ஏமாந்து நிற்கும் மக்கள்

# நாளைய வலி.வடக்கு விடுவிப்புப் போராட்டத்திற்கு பொது அமைப்புக்கள் ஆதரவு தெரிவித்து அறிக்கை

**நாளை நடைபெறவுள்ள வலி.வடக்கு விடுவிப்பிற்கான வெகுஜன எழுச்சிப் போரட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து இப்பகுதி வெகுஜன அமைப்புக்கள் அறிக்கைகளை விடுத்துள்ளன. அவற்றின் விபரம் வருமாறு.**

### குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம்

புரிந்துணர்வு ஒப்பந்தம் அனைத்து மக்களுக்கும் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தும் என்று எதிர்பார்த்து, கடந்த ஏழு மாதங்களாக வலி.வடக்கு மக்கள் தமக்கும் விடிவு வரும் என்று நாளுக்கு நாள் எதிர்பார்த்து, ஏமாந்து விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுள்ளனர். உயர் பாதுகாப்பு வலயத்துக்கு உட்பட்ட இம் மக்களுக்கு இயல்பு வாழ்க்கை தேவையற்றது என்றவாறு நாட்கள் நகருகின்றன.

அடிப்படை மனித உரிமைகள் அனைத்துமே மறுக்கப்பட்ட நிலையில் நாடோடிகளாக, நடைப்பிணங்களாக வாழும் எமது மக்களின் விடிவுக்காக நடைபெறும் வலி. வடக்கு, தெற்குப் பொது அமைப்புக்களின் ஒன்றிய எழுச்சிப் பேரணிக்கு எமது சங்கம் பூரண ஒத்துழைப்பை வழங்கவுள்ளது.

நாளைய தினம் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் புலம் பெயர்ந்து வாழும் குரும்பசிட்டி மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

### வலிகாமம் வடக்குப் புனர்வாழ்வுக் கழகம்

வலி.வடக்கு மக்கள் நாளை நடாத்தும் பெரும் எழுச்சிப் பேரணிக்கு நாம் முழு ஒத்துழைப்பையும் வழங்குகின்றோம். புரிந்துணர்வு ஒப்பந்தம் கூறும் இயல்பு வாழ்க்கை வலி. வடக்கு மக்களுக்கு மறுக்கப்படுவதை நாம் வன்மையாக ஆட்சேபிக்கின்றோம். இரண்டு தசாப்தங்களாக இடம் பெயர்ந்து சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துக் கொண்டு இருண்ட வாழ்க்கை வாழும் வலி. வடக்கு மக்களை சொந்த இடத்தில் குடியமர அனுமதிக்க வேண்டும். இல்லை எனின் எமது போராட்டம் பல வடிவங்களை எடுக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### வலிகாமம் வடக்கு விவசாயிகள் சங்கம்

வலிகாமம் வடக்கு விவசாயிகள் சங்கத்தினராகிய நாம் கடந்த இரண்டு தசாப்தங்களாக விவசாய நிலங்களை இழந்து, சொத்து சுகங்கள் அத்தனைகளையும் இழந்து, அனுபவித்து வரும் இன்னல்களை யாவரும் அறிவர்.

எமது சொந்த நிலங்களில் விவசாயம் செய்வதற்கும், சொந்த மண்ணில் வசிப்பதற்கும் எமது சங்கம் மேற்கொண்டு வந்த நடவடிக்கைகள் இன்று வரை எதுவித பலனும் தரவில்லை. நாம் அனைவரும் ஒன்றுபட்டுப் போராட வேண்டியதே எமக்கு ஒரே ஒரு வழியாகும்.

எனவே- வலிகாமம் வடக்கு, தெற்கு பொது அமைப்புகளது ஒன்றியம் நடத்தும் நாளைய எழுச்சிப் பேரணியில் அனைத்து வலி. வடக்கு விவசாயிகளையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

### யாழ். மாவட்ட இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம்

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இடம் பெயர்ந்து அல்லலுறும் மக்களின் துயர் நீக்கிட நடைபெறும் எழுச்சிப் பேரணியிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் பொதுக் கூட்டத்திலும் அனைத்து மக்களையும் அணிதிரளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

- எமது சொந்த மண்ணில் வாழும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது.
- எமது விவசாய நிலங்கள் அழிகப்பட்டு, அவற்றில் பயிர் செய்து வாழும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது
- எமது தொழிறசாலைகள் அழிக்கப்பட்டு, தொழில் செய்யும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது.
- கடலுக்குச் செல்ல விாது தடுத்து, எமது தொழில் உரிமை மறுக்கப்பட்டுள்ளது.
- எமது வழிபாட்டுத்தலங்கள் அழிகப்பட்டு, வழிபாட்டுச் சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது.

இவ்வகையில் எம்மை எல்லாம் அகதிகளாக்கி சொந்த மண்ணில் நலன்புரி நிலையங்களிலும் உறவினர் வீடுகளிலும் பொது இடங்களிலும் அடிப்படை வசதியின்றி அவல வாழ்வு வாழும் அடிமை நிலையிலிருந்து, மீளவும் எமது சொந்த மண்ணில் சுதந்திரமாக வாழவும், வழிபாட்டுத்தலத்தில் சுதந்திரமாக வழிபடவும் விடவேண்டும்.

எமது உரிமைகளை நிலைநிறுத்திட நாளை நடைபெறும் எழுச்சிப் பேரணியிலும் பொதுக்கூட்டத்திலும் அனைத்து நலன்புரி நிலையங்களிலும் உறவினர் வீடுகளிலும் பொது இடங்களிலும் வாழும் இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் அலை அலையாக அணிதிரண்டு எம் உணர்வுகளை வெளிக்காட்டுங்கள். சர்வதேச சமுகத்திற்கு அம்பலப்படுத்துங்கள். எமது உடன் பிறப்புக்களுக்கு உணர்வுடன் இவ் அறை கூவலை சமாசம் அழைப்பு விடுக்கின்றது.

மக்கள் சக்தி மாபெரும் சக்தி.
உரிமைக் குரல் கொடுப்போம்
உண்மை வெளிப்படுத்துவோம்.

### மல்லாகம் வர்த்தகர் சங்கம்

அடிப்படை உரிமைகளான சொந்த நிலத்தில் வாழுதல், தொழில் புரிதல் என்பன மறுக்கப்பட்டு அகதி வாழ்வு வாழும் வலி.வடக்குப் பிரதேச மக்கள் போர் நிறுத்தமும் புரிந்துணர்வு ஒப்பந்தமும் தொடர்ந்து சமாதான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வரும் இக்காலகட்டத்தில் கூட, அந்த நிலையிலிருந்து எந்த மாற்றமும் இன்றி தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருவதுடன், அவர்களின் இல்லிடமும் சொத்துக்களும் தொடர்ந்து அழிவு நிலைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன. இந் நிலைமையினை அரசிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் எடுத்துக்காட்டும் ஓர் நிகழ்வே இவ்எழுச்சிப் பேரணியாகும். இவ் எழுச்சிப் பேரணி அவர்களின் உரிமைப் போராட்டத்தில் ஓர் படிக்கல்லாக அமையட்டும். வளமுள்ள வலிகாமம் தமிழ் மக்களின் பாரம்பரியம்.

இவ் எழுச்சிப் பேரணிக்கு மல்லாகம் வர்த்தகர் சங்கம் தனது ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றது.

# மகாஜனாவின் பொற்கால அதிபர்

## இன்று ஜயரத்தினம் நினைவு தினம்

பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள், தாம் நிறுவிய கல்லூரியை தனக்குப் பின் வளர்ச்சிப் பாதையில் உயர்ச்சி பெறச் செய்வ



தற்கு வாரிசுகளாக இருவரைப் பயிற்றுவிட்டே சிவனடி சேர்ந்தார். ஒருவர் அமரர் கா.சின்னப்பா அவர்கள். மற்றவர் பிள்ளையவர்களின் மூத்தமகன். இவர் அமரர் சின்னப்பா அவர்களின் பின் கல்லூரி அதிபர் பதவியை ஏற்றுத் தந்தையின் புனிதமான எண்ணத்தைப் பூர்த்தி செய்தார். அந்தப் பெருமகனின் நினைவு நாள் ஒக்டோபர் 29ஆம் திகதியாகும். இந்த நன்னாளில் அவர்களைப் பற்றியும் மகாஜனா பற்றியும் சிறிது சிந்திப்போம்.

### முகாமைத்துவப் பண்பு

அமரர் தெ.து.ஜயரத்தினம் அன்பு நிறைந்த ஆசான். ஆற்றல் மிக்க அதிபர், அழகான தோற்றம், எவரையும் தன்வசப்படுத்தும் புன்சிரிப்பு, புனிதமான உடை, பரிசுத்தமான உள்ளம், உயர்ந்த சிந்தனை, வகுப்பறைக் கற்பித்தலைத் திறம்படச் செய்தார். ஆங்கிலம் கற்பிப்பதில் அவருக்கு அவரே நிகர். கற்பிக்கும் பாடத்தைத் திட்டமிட்டு, ஒழுங்குபடுத்தி குறித்த நேரத்தில் குறித்த வகுப்பில் கற்பிப்பார். நிர்வகித்தல் கடமையை மிகச் சிறப்பாகச் செய்தார். காலையில் இருமுறை, மாலையில் ஒருமுறை கல்லூரியைச் சுற்றி வருவார். கையில் பிரம்பு இருக்கும். தலையில் தொப்பி இருக்கும். ஆசிரியர் ஒருவருடன் ஒருவர் கதைப்பது சிறிய, பெரிய ஆறுதல் நேரத்திலும், ஆசிரியர் அறையில் ஓய்வான நேரத்திலும் மட்டுமே. பாட நேரத்தில் ஆசிரியர்கள் வகுப்பறையில் தம் கடமையில் ஈடுபடுவதையும், சிற்றூழியர்கள் தங்கள் பொறுப்பான வேலையில் ஈடுபடுவதையும் காணலாம்.

ஆசிரியர்களின் உள்ளார்ந்த ஆற்றல், ஆளுமைப் பண்பு, திறமைகள், நாட்டங்கள், தேவைகள் ஆகிய சகலதையும் இனங்கண்டு பொருத்தமான பணிகளைப் பகிர்ந்து கொடுப்பதில் வல்லவர். அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள் ஒரு குடும்பம் போன்ற நிலையை ஏற்படுத்திக் கூட்டுப் பொறுப்புக்களைக் கொடுத்துக் கல்லூரியின் வளர்ச்சியில் எல்லோரும் ஈடுபடக்கூடிய நிலையை ஏற்படுத்தினார்.

### சமூகத்தொடர்பு

முகாமைத்துவப் பண்பை, தனது ஆளுமைத்திறனைக் கல்லூரிக்குள் மட்டுமல்ல வெளியிலும் காட்டினார். சமயத்துறை, கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகிய துறைகளிலும் ஈடுபட்டு உழைத்தார். பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர் சங்கம் போன்ற அமைப்புக்களை நன்கு திட்டமிட்டு அமைத்து எல்லோருடைய ஒத்துழைப்பையும் கல்லூரிக்குப் பெற்றுக்கொண்டார். அதிபர் அமைத்துத் தந்த பழைய மாணவர் யாப்பு ஒரு புதிய அமைப்பு. அந்த யாப்பே இன்றும் நடைமுறையில் இருக்கிறது. பழைய மாணவர் என்போர் முத்தரப்பினர். மகாஜனாக்கல்லூரியில் கற்றவர், கற்பித்தவர், கற்பிக்கின்றவர் ஆகியோர் பழைய மாணவர்களாகக் கருதப்படுவர்.

### கல்லூரியின் அதிவேகமான வளர்ச்சி

அமரர் ஜயரத்தினம் 1945 இல் அதிபர் பதவி ஏற்றபோது 14 ஆசிரியர்கள், 250 மாணவர்கள். அவர் ஓய்வுபெற்ற போது 1970 இல் 64 ஆசிரியர்கள், 1900 மாணவர்கள். 1961 இல் அதி உயர் கல்லூரி (**SUPRA GRADE**) ஆனது. சுமார் 16 ஆண்டுகளுக்குள் ஏனைய பாடசாலைகள் அதிசயக்கக்கூடிய வளர்ச்

**வே.தனபாலசிங்கம்**

சியை மகாஜன மாதா கண்டாள். இப்படியான ஆளுமையுள்ள அதிபருக்கு ஒரு வருடமோ, ஆறு மாதமோ சேவை நீடிப்பை அன்றைய கல்வி அமைச்சு கொடுக்க விரும்பவில்லை. ஐம்பத்தைந்து வயதில் ஓய்வு பெற வேண்டிய நிலை. ஓய்வுபெற்ற பின்பும் கல்லூரி வளர்ச்சியில் அவரது சிந்தனை போய்க் கொண்டிருந்தது. 1976 இல் பொ.கனகசபாபதி அதிபராக வந்தமையால் ஜயரத்தினத்தின் மனம் மகிழ்சசியடைந்தது. ஆனால் இன்றைய மகாஜனாவை நினைக்கும்போது நாம் கவலைப்படாமல் இருக்கமுடியாது.




பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினர், நலன் விரும்பிகள், இன்றைய அதிபர், ஆசிரியர்கள் எல்லோரும் முயற்சித்தால் திரும்பவும் பொற்காலம் வரமுடியாதா? இன்றைய நினைவு நாளில் - அன்றைய நிலைக்குக் கல்லூரியை உயர்த்த முயற்சிப்போமாக.

*

# ஓட்டுநர்களின் கவனக் குறைவினாலேயே அதிகளவிலான விபத்துக்கள் ஏற்படுகின்றன

எழுபத்தைந்து வீதமான விபத்துக்கள் வாகன ஓட்டுநர்களின் கவனக் குறைவினால்தான் ஏற்படுகின்றன. என்று போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போக்குவரத்துப் பொலிஸார் 100 வீதம் பொறுப்புணர்வு உள்ளவர்களாக இருக்க வேண்டும். அடிக்கடி ஏற்படும் விபத்துக்கள் கவலை அளிக்கக் கூடியதாக இருக்கின்றது என்று பொலிஸ் அதிகாரி அல்பிரட் விஜயவர்த்தனா தெரிவித்தார்.

இதேவேளை -

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் ஜினதாச கருததுக் கூறுகையில் - அதிகபாரம் கூடிய வாகனங்களால்தான் விபத்து ஏற்படுகிறது. புதிய வாகன அனுமதிப்பத்திர முறை விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்றார்.

# இன்றைய நாள் இனிய நாள்

**29.10.2002 - செவ்வாய்க்கிழமை**

| | |
|---|---|
| **மேடம்:-** | தேகசுகம் நன்று, பணவரவு, பொது வாழ்வில் கௌரவம்,மகிழ்ச்சி,கல்வி முன்னேற்றம்,வியாபார முன்னேற்றம். |
| **இடபம்:-** | தேகசுகம் நன்று,பணவரவு,புதிய காரியம் தொடங்குவது நன்று,கல்விச் சமநிலை,வியாபாரம் சமநிலை. |
| **மிதுனம்:-** | தேகசுகம் நன்று, பணவரவு,மகிழ்ச்சி, அறிஞர் உறவு, கல்வி முன்னேற்றம்,வியாபார முன்னேற்றம். |
| **கர்க்கடகம்:-** | தேகசுகம் நன்று,பணவரவு,விருந்தினர் வருகை, மகிழ்ச்சி,கல்விச் சமநிலை,வியாபார முன்னேற்றம். |
| **சிங்கம்:-** | தேகசுகக் குறைவு, வீண்செலவு, மனஸ்தாபம், அயலவர்களின் உறவு மந்தநிலை,கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| **கன்னி:-** | தேகசுகம் நன்று, பணவரவு,மனமகிழ்ச்சி தரும் சம்பவம் நிகழல்,தெய்வ தரிசனம்,கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| **துலாம்:-** | தேகசுகம் நன்று, பணவரவு, பொதுச் சேவையில் மதிப்பு, வெளியூர் பயணம்,கல்விச் சமநிலை. |

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்**
**அவர்களின் சகோதரரின் புத்திரர்**
**இ.வெங்கடேச ஐயர்.**

| | |
|---|---|
| **விருச்சிகம்:-** | தேகசுகம் நன்று,பணவரவு,தெய்வ தரிசன பலன், சமய அறிஞர் உறவு,கல்வி முன்னேற்றம்,வியாபாரம் சமநிலை. |
| **தனு:-** | தேகசுகக் குறைவு,பணவரவு,தேவையற்ற பயம், புதிய காரியம் தொடங்குவது நன்றல்ல,கல்வி முன்னேற்றம்,வியாபார முன்னேற்றம். |
| **மகரம்:-** | தேகசுகம் நன்று, பணவரவு, விருந்தினர் வருகை, அறுசுவையுண்டி, தெய்வ தரிசனம்,கலை நிகழ்ச்சி மகிழ்வு,கல்வி முன்னேற்றம்,வியாபார முன்னேற்றம். |
| **கும்பம்:-** | தேகசுகம் மத்திமம், பணவரவு சமம், கௌரவக் குறைவு, மனநிலையில் மாற்றம், கல்வி சமம், வியாபார முன்னேற்றம். |
| **மீனம்:-** | தேகசுகம் நன்று,பணவரவு, வாகனபலன், புதிய ஆடை அணிதல்,கல்வி முன்னேற்றம்,வியாபார முன்னேற்றம். |

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

CES COMPUTERS ELECTRONIC SYSTEMS (PVT) LTD

- கணினியில் முன்னனுபவம் இல்லாதவர்களிற்கு தனிப்பட்ட முறையில் விசேட கவனம் செலுத்தப்படும்.
- சிறுவர்களிற்கான அறிமுக வகுப்புக்கள், games, மற்றும் விசேட வகுப்புக்கள்.

கணினி உலகில் முன்னணியில் திகழ இன்றே நாடுங்கள்!!

Computer Electronic Systems (Pvt) Ltd.
No.223, Kasthuriyar Road,
Jaffna.
(Near J/Hindu Primary School)

விண்ணப்ப முடிவுத் திகதி:
15.12.2002

# ஒஸ்ரின் பெர்ணான்டோ இன்று யாழ்.வருகிறார்!

## உயர் பாதுகாப்பு வலயம் குறித்து ஆராய்வார்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ இன்று யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார்.

யாழ்.செயலகத்தில் இன்று காலை நடைபெறவுள்ள விசேட கூட்டம் ஒன்றில் இவர் கலந்து கொள்ளவுள்ளார். மக்களின் மீள் குடியமர்வு தொடர்பாகவும் உயர் பாதுகாப்பு வலயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்தும் யாழ். செயலகத்தில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

மேலும் யாழ்.கரையோரப் பகுதி மற்றும் அரியாலை, தென்மராட்சி, வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் மக்களின் மீள் குடியமர்வுக்கு வசதியாக படைநிலைகளில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்தும் களநிலைக்குச் சென்று ஆராயப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 150 வழக்குகள் விசேட நீதிமன்றுக்கு

(கொழும்பு நிருபர்)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கொழும்பு மேல் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 150 வழக்குகள் வெலிக்கடைச் சிறையில் உள்ள விசேட மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டுள்ளன.

தமிழ் அரசியற் கைதிகளின் இந்த 150 வழக்குகளையும்- மாற்றும் அறிவித்தலை பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா வெளியிட்டார்.

தமிழ் அரசியற் கைதிகளின் மீதான விசாரணைகளைத் துரிதப்படுத்தவே இந்த விசேட மேல் நீதி மன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த விசேட நீதிமன்றத்தின் அமர்வுகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(01)

# மீண்டும் இராணுவத்திடம் செல்ல விரும்பாத சிப்பாய்

## சரணடைந்தவர் புலிகளிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை 11 மணிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். அரசியற்துறை பணிமனையில் சரணடைந்த சிப்பாய் தன்னைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டார்.

நேற்றுக்காலை தம்மிடம் சரணடைந்த சிப்பாயை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைக்கும் முகமாக - நேற்று மாலை 4.30 மணிக்கு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.பிரதிநிதியை, விடுதலைப் புலிகள் தமது பணிமனைக்கு அழைத்து மேற்படி சிப்பாயை ஒப்படைத்த போது, போர் நிறுத்தகண்காணிப்புக் குழுவின் யாழ்பிரதிநிதி - இவரைத் தாம் பொறுபேற்று இராணுவத் தலைமையகத்தில் மட்டுமே ஒப்படைப்பேன் எனத் தெரிவித்தார்.

தன்னை மீண்டும் இராணுவத் தலைமையகத்தில் ஒப்படைப்பதை விரும்பாத மேற்படி சிப்பாய் - தன்னை தனது சொந்த இடத்திற்கு அனுப்பி வைக்குமாறு புலிகளைக் கேட்டுக் கொண்டதுடன் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுடன் செல்லவும் மறுத்தார்.

கண்காணிப்புக்குழுவின் யாழ். பிரதிநிதி மேற்படி சிப்பாய் இராணுவ தலைமையகத்தில் ஒப்படைக்க சம்மதித்தால்தான், தாம் இவரை பொறுப்பேற்க முடியும் என கூறி மேற்படி சிப்பாயை பணிமனையில் விட்டு விட்டுச் சென்றுவிட்டார். அதன் பின்னரே மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் அச்சிப்பாய் ஒப்படைக்கப்பட்டார்.(லி)

### ஒன்றியக் கூட்டம்

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பொதுக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெற உள்ளதாக ஒன்றியச் செயலாளர் அறிவித்துள்ளார்.

# மனித உரிமை மீறல் வழக்கு இவ்வாண்டில் அதிகரிப்பு

## தமிழர்களே அதிகம் தாக்கல் செய்தனர்

(கொழும்பு)

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு - கொழும்பு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனித உரிமை மீறல் வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டு 526 அடிப்படை மனித உரிமைமீறல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள வேளையில் - இந்த ஆண்டின் முதல் பத்து மாதங்களில் 671 வழக்குகள் தாக்கலாகியுள்ளன.

இவற்றுள் - படையினர் மற்றும் பொலிஸாரின் தடுப்புக்காவலில் நடாத்தப்பட்ட சித்திரவதைகள் பற்றிய மனித உரிமை மீறல் வழக்குகளே அதிகமானவை. இவற்றைப் பெரும்பாலும் தமிழர்களே தாக்கல் செய்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

இதைவிட அரசாங்க ஊழியர்கள், தமது பதவியுயர்வு பற்றியும், பெற்றார் தமது பிள்ளைகளுக்கு மறுக்கப்பட்ட பாடசாலை அனுமதி பற்றியும் - கூடுதலான மனித உரிமை வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளனர்.

(01)

# கடல் வழியாக புலிகள் இன்று வாகரை பயணம்

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணத்துக்கான விடுதலைப்புலிகளின் மற்றுமொரு கடல் வழிப்பயணம் இன்று நடைபெறவுள்ளது.

கிழக்கு மாகாணத்துக்கான நானாவது கடற்பயணத்தின் போது சுமார் 80 விடுதலைப் புலிகளின் போராளிகள் முல்லைத்தீவில் இருந்து வாகரைக்குச் செல்லவிருக்கின்றனர். இதேபோல- விடுதலைப் புலிகளின் அடுத்த கடல்வழிப்பயணம் எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ளது. இப்பயணம் வாகரையிலிருந்து முல்லைத்தீவுக்கு மேற்கொள்ளப்படவுள்ளது.

# நயினாதீவுக் கடலில் இந்தியப் படகுகள் பதினாறு மீனவர் கடற்படையால் கைது!

(புளியங்கூடல்)

நயினாதீவுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த நான்கு இந்திய மீன்பிடிப்படகுகளை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர். அத்துடன் பதினாறு இந்திய மீனவர்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று மதியம் நயினாதீவுக்கும் காரைநகருக்கும் இடையில் உள்ள கடற்பரப்பில் மேற்படி றோலர் மீன்பிடிப் படகுகள் மூலம் மீன்பிடித்தலில் ஈடுபட்டிருந்த சமயமே காரைநகர் கடற்படையினர் இவர்களைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களும் மீன்பிடிப்படகுகளும் ஊர்காவற்றுறை பொலிஸ் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இவர்கள் அனைவரும் நாளை பொலிஸாரால் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

(97)(51)

### ஹாட்லிக் கல்லூரி அதிபர் இடமாற்றம்

ஹாட்லிக் கல்லூரி அதிபர் எம். ஸ்ரீபதிக்கு முன்னர் வழங்கப்பட்ட இடமாற்றம் தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட இந்த இடமாற்ற உத்தரவை நடைமுறைப்படுத்துமாறு ஹாட்லிக் கல்லூரி அதிபர், வட - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சைக் கோரியதற்கிணங்கவே முன்னர் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்த இடமாற்றம் நடைமுறைக்கு வந்துள்ளது.

இவர் தற்பொழுது வடமராட்சி கல்வி வலயத் திணைக்களத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது. (17)

### மஹன்னா வேளை

யாழ்.முஹைதியா பள்ளிவாசலில் 13 வருடகால இடைவெளியின் பின் நேற்று முன்தினம் மஹன்னா வேளை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(108)

# செச்னியப் பகுதிகளில் ரஷ்ய விமானத் தாக்குதல்

செச்னியப் பிரதேசங்கள் மீது ரஷ்ய விமானப்படை தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது. மொஸ்க்கோ பணய நாடகத்துக்குப் பழி வாங்கும் நடவடிக்கையே இதுவென செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

இத்தாக்குதல்களில் பல செச்னிய அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனச் சுயாதீன செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

ரஷ்ய அரசாங்கம் தனது தாக்குதல்களில் முப்பதுக்கும் மேற்பட்ட செச்னியப் போராளிகள் கொல்லப்பட்டுள்ளதுடன் இன்னும் பல போராளிகள் காயமடைந்தனர் எனத் தெரிவித்தது.

# இறுதி முடிவுகளை...

பேசினார்.

குறிப்பாக -

பாதுகாப்புத்துறை மற்றும் சமாதான முயற்சிகள் பற்றியே இச்சந்திப்பில் பலத்த வாக்கு வாதங்கள் நடைபெற்றன.

### செயலணிக்குழு விவகாரம்

தாய்லாந்து இரண்டாம் கட்டப் பேச்சுக்கு முன்னரான - முன்னர் அறிவிக்கப்பட்டதன் பேரிலான இச் சந்திப்புக்கு, பிரதமர் ரணில் சென்று பேச்சுக்கள் பற்றி விபரித்தபோது,

விடுதலைப் புலிகள் பங்கேற்கும் கூட்டுச் செயலணி பற்றித் தனக்கு முழுமையான தகவல்கள் தரப்பட வேண்டும் எனவும்,

அரசின் எந்தவொரு அதிகார மைய உருவாக்கம் பற்றிய செயற்பாடும் தனக்கு அறிவிக்கப்பட வேண்டுமென்றும்,

இறுதியாக நாட்டுக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பில் இருப்பவர் என்ற ரீதியில், இது தொட்ர்பாகத் தனக்குத் தெரியப் படுத்துவது அரசின் கடமை என்றும் ஜனாதிபதி சந்திரிகா கூறினார்.

### இராணுவ அதிகாரிகளுக்கான சேவை நீடிப்பு

இராணுவத்திலுள்ள எட்டு மேஜர் ஜெனரல்களுக்கு பதவி நீடிப்பு வழங்கும் விவகாரத்தில் - தான் எந்த நிராகரிப்பும் செய்ய வில்லையென்று தெரிவித்த ஜனாதிபதி சந்திரிகா -

இந்தச் செய்தி ஐ.தே.க. ஊடகங்களினால் தனக்கெதிராகப் பரப்பப்பட்ட தவறான செய்தி என்றும் - இது ஒரு சதி முயற்சியே என்றும் கூறினார்.

### பாதுகாப்பு மீளாய்வுக் குழு

தன்னிடமிருந்து பாதுகாப்புத் துறை சம்பந்தமான அதிகாரங்களைக் குறைப்பது பற்றியும் - பாதுகாப்பு மீளாய்வுக் குழு என ஒரு குழு அமைக்கப்பட்டு, அதனிடம் அப் பொறுப்பு ஒப்படைக்கப்படுவது பற்றியும் ஆராயத் தனக்குக் கால அவ காசம் தேவை என ஜனாதிபதி சந்திரிகா ரணிலிடம் தெரிவித்தார்.

இன்னும் இரண்டு வாரங்களின் பின்னரே தனது முடிவைத் தெரிவக்க முடியுமென்றும் அவர் கூறினார்.

### கிழக்கு மாகாணச் சம்பவங்கள்

கிழக்கில் நடைபெற்ற சம்பவங்களில் விடுதலைப் புலிகளே போர் நிறுத்த உடன்பாட்டினை மீறினார்கள் எனத் தனக்குத் தகவல் கிடைத்திருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி-

கிழக்கு மாகாண நிலவரங்கள் பற்றி தனக்கு அரசாங்கம் உரிய முறையில் தகவல்களைத் தரத் தவறிவிட்டதாகக் குற்றஞ்சாட்டினார்.

இதேவேளை - அரசாங்கத் தரப்பிலிருந்தோ, பிரதமர் தரப்பிலிருநதோ தனக்குத் தெளிவான தகவல்கள் தரப்படாததாலேயே -

தான் பொதுக்கூட்ட மேடைகளில் மக்களிடம் சென்று தனது கருத்துக்களைக் கூறவேண்டியிருப்பதாகவும் பிரதமர் ரணிலிடம் அவர் தெரிவித்தார்.

# புலிகளிடம்...

மணிக்கு விடுதலைப் புலிகளின் யாழ்.அலுவலகப் பிரதிநிதி நிசாந்தன் பத்திரிகையாளர் முன்னிலையில் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு பிரதிநிதி சந்திரசேகராவிடம் ஒப்படைத்தார். (லி)

# என்னைப் போல்...

லைப் புலிகள் 18 வயதுக்குக் குறைந்தவர்களை படையில் சேர்ப்பதாக வெளிநாடுகளில் பிரசாரம் செய்து வந்தமையும் இது குறித்து ஆராய ஐ.நாவைச் சேர்ந்த சிறுவர் உரிமைகளுக்கு பொறுப்பான ஒலரா ஒட்டுணு இலங்கைக்கு விஜயம் செய்தமையும் குறிப்பிடத்தக்கது. (லி)

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.10 | 96.54 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 148.57 | 149.86 |
| 1 யூரோ | 93.45 | 94.55 |
| 1 சுவிஸ் பிராங் | 63.61 | 64.58 |
| 1 அவுஸ்ரேலிய டொலர் | 53.00 | 53.93 |
| 1 ஜப்பானிய யென் | 00.76 | 00.77 |
| 1 சவூதி றியால் | 25.78 | 25.78 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.10.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.